ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

மலர் 47] விபவ ஆண்டு வைகாசித்திங்கள் 10-6-88 [இதழ் 7

தருமை ஆதீனக் குருமுதல்வர்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜைப் பெருவிழாவில்

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்

பட்டினப்பிரவேசத்திற்கு எழுந்தருளல்

6—6—1988

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தசுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர்

அருள்வாக்கு

ஈசனையே காண
  வெனத்தவமுன் செய்ததெலாம்
மோசமாய் வந்து
  முடிந்ததே — பாச
வினையகன்ற போதும்
  விமலனே நின்னருள்
தனையறியா மூடர்க்குத் தான்.

— முத்திநிச்சயம் 9

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்
முதலியார்

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத்திங்கள்இதழ்

மலர் 47 | 10-6-88 | இதழ் 7

உட்பொருள்

எண்		பக்கம்
1	மக்களும் தத்துவக் கல்வியும் ...	337
2	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ...	341
3	"தோத்திர சாத்திர ஒப்பாய்வுக் கருத்தரங்கம்" ...	349
4	அபிராமி அந்தாதி ...	353
5	போதமும் சித்தியும் ...	357
6	மேலை நாட்டுத் தத்துவ மேதைகள் ...	360
7	சைவ சமயமும் பரிணாமக் கொள்கையும்	365
8	தோண்டி எடுக்கப்பட்ட அபூர்வமான சிவலிங்கம்	367
9	கடிதம் ...	370
10	சாக்கிய நாயனார் ...	371
11	செய்திகள் ...	376
12	எதிர்காலம் ...	381
13	இதழ்வழிச் சைவசமயக் கல்வி IV. பாடம்-5. ...	385

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 47 ★ இதழ் 7

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

விபவ வைகாசி 10—6—1988

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியிஞய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்

மக்களும் தத்துவக் கல்வியும்

கல்வியின் குறிக்கோள் :

கல்வியின் குறிக்கோள் என்ன என்று இன்று பொதுவாகப் பலருக்கும் தெரியவில்லை; எதற்காகக் கல்வி கற்பது? கல்வியின் பயன்பாடு என்ன? இந்தக் கேள்விகளுக்கு விடை தெரியாமலேயே பலர் கற்று முடிப்பது மட்டுமன்று; வாழ்ந்தும் முடித்து விடுகின்றார்கள். கல்வி கற்பது ஊதியம் பெறுவதற்கும் ஊழியம் புரிவதற்கும் மட்டும் தானு? சிந்திக்க வேண்டும். ''அறம்பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே'' என்கின்றது தமிழ்இலக்கணம்.

" கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவன்
நற்ருள் தொழாஅர் எனின் ''

என்கின்றது பொய்யா மொழி. ஆகமக்கல்வியே கல்வி என்ற கருத்துடன் பரிமேலழகர் உரை தருவது அறிவுலகம் அறிந்ததே. சமயக்கல்வி, தத்துவக்கல்வி, ஆன்மீகக் கல்வியே அடிப்படைக்

கல்வி என்ற திருவள்ளுவர் கோட்பாடு கூர்ந்து நோக்கத்தக்கது. அதுவே ஆன்மலாபத்தைத் தருவது. ஆன்மலாபம் தராத படிப்பால் என்ன பயன் உண்டாக முடியும்? நம் பாரத நாடு பழம் பெரும் ஞானபூமி. இதிற்பிறந்த அனைவர்க்கும் இதன் ஞானக் கருவூலங்கள் அனைத்தும் உரியன. வேதம், ஆகமம், இதிகாசம், புராணம், திருமுறை, திவ்வியபிரபந்தம் முதலிய அனைத்தும் காட்டும் அறநெறிக் கல்வியே ஆன்மீகக் கல்வி ஆகும்.

அடிப்படை நோக்கம் :

இக்கல்வி இல்லாத சராசரிக்கல்வி, பொதுக்கல்வி என்ற பெயரில் நிலவிவரும் வயிற்றுப்பாட்டுக் கல்வி, வேலை தேடித்தரும் கல்வி. இவற்றை மட்டும் பயின்ற தலைமுறையில் கட்டுப்பாடு, கண்ணியம், பண்பாடு, நாகரிகம், முதலியவற்றை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

இந்த அடிப்படை நோக்கத்துடன் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி கனகாபிஷேக நினைவு சைவசித்தாந்த மாலை நேரக்கல்லூரியைத் தருமைஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் சென்ற ஆண்டில் தொடங்கத் திருவுள்ளம் பற்றினார்கள்.

ஒருங்கிணைந்த சைவசித்தாந்தத் தத்துவக்கல்வி :

ஒரு பேராற்றின் பெருவெள்ளத்தில் இருந்து கிளைநதிகளும், வாய்க்கால்களும், நாடெலாம் பரவி ஊடுருவிப் பாசன வசதிக்குப் பயன்படுவது போல, தருமை ஆதீனத்தின் அனைத்துலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தின சார்பில் தொடங்கப்பட்டுள்ள கல்லூரிகள், கிளைநதிகளாக அனைத்துச் சமயத் தத்துவங்களையும் கொண்ட ஒரே பாடத்திட்ட அடிப்படையில், "ஒருங்கிணைந்த சைவ சித்தாந்தக் கல்வி" பெருநகரங்கள் தோறும் அமைக்கப் பெறவும் திருவுள்ளம் பற்றினார்கள். இந்த வகையில் இக்கல்லூரி மயிலாடுதுறை, சிதம்பரம், சென்னை, திருச்சி, மதுரை, திருநெல் வேலி, காரைக்கால் ஆகிய ஏழு பெருநகரங்களில் 1988 - 89 கல்வி யாண்டில் தொடங்கப் பெற்று இனிது நிகழ்ந்து, இந்தக் கல்வி யாண்டில் இரண்டாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றது.

தத்துவம் எங்கே தோன்றியது?

மக்களிடையே இன்றும் ஏற்றத்தாழ்வுகள் பலவற்றைக் காண்கின்றோம். இந்த ஏற்றத்தாழ்வு ஏன் வந்தது? என்ற

சிந்தனையில் முகிழ்த்ததுதான் தத்துவம். அவரவர் செயல்களே அவரவர்க்குப் பெருமையையும், சிறுமையையும் தேடித் தருவன என்கின்றது தத்துவம். இதனையே திருவள்ளுவர்,

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்"

என்றார். இந்தச் செயல்கள் ஒரு பிறவியில் மட்டும்தானா கணக்கிடப் படுகின்றன? இல்லை. பிறவிகள் தோறும் செய்யும் செயல்கள் ஒருவரைப் பாதிக்கின்றன; ஒருபிறப்பில் மட்டுமன்று; அடுத்தடுத்த பிறவிகளிலும்தாம்.

பல பிறவிகளிலும் ஒருவன் செய்த நல்வினை, (நற்செயல், புண்ணியம்) தீவினை, (தீயசெயல், பாவங்கள்) அவன் அநுபவிக்கத் தக்க பயன்களாக அவனைத் தேடிவருகின்றன. "இவ்வாறு தேடி வரும் வண்ணம் கருணை பாலிப்பவன் இறைவன் ஒருவனே" என்கின்றது சைவசித்தாந்தம். "சேர்ப்பான்" என்ற சொல் சைவ சித்தாந்த ஞானாசிரியர்கள் திருவாக்கில் காணப்படுகின்றது.

ஆழ்ந்த சிந்தனை வேண்டும் :

இந்த உணர்வு மக்களிடையே பரவவேண்டும். இந்த உணர்வை அழுத்தமாக மக்கள் மனத்தில் பதியும்படி செய்ய வேண்டும். அடைந்துள்ள வறுமைத் துன்பம் பிறரால் வந்ததன்று; அவரவரால்தான் வந்தது, என்பதையும் உணரவேண்டும் அல்லது உணர்த்த வேண்டும்.

"இலர் பலராகிய காரணம் நோற்பார்
சிலர் பலர் நோலாதவர்"

என்னும் திருக்குறட் கருத்தை எடுத்துக்காட்ட வேண்டும். தவம் செய்வார் சிலராகவும், தவம் செய்யாதார் பலராகவும் உள்ளமையே செல்வம் உடையவர் சிலராகவும், வறுமை உடையவர் பலராகவும் உள்ளமைக்கு நுட்பமான காரணம் என்பதைக் கூர்ந்து நோக்கினால் விளங்கிக் கொள்ளலாம்.

"தவம் செய்வார் தம் கருமம் செய்வார் மற்றல்லார்
அவம் செய்வார் ஆசையுட் பட்டு"

என்ற திருக்குறளையும் இந்தக் கூர்மையான பார்வையுடன் நோக்குதல் வேண்டும் 'தம் கருமம் செய்பவர், என்பவர் தவம் செய்பவரே' என்கின்றார் வள்ளுவர். 'இந்தத் தவமும் தவம்

உடையார்க்கே ஆகும்; சைவசித்தாந்தம் ஒன்றே இந்த உண்மையைத் தெரிந்து கொள்ள வழிவகுப்பது; ஏனைய 'புறச்சமயங்கள் இந்த அளவிற்கு உயர் சிந்தனை இன்றி வேறு வகையில் தத்தம் நிலையில் கொள்கைகளை வகுத்துக் கொண்டுள்ளன' என்பது அறுவகைச் சமயங்களை ஒப்பீடு செய்து காண்பார்க்கு இனிது விளங்கும்.

மூவகை நிலைகளில் :

இதனாலேயே சைவசித்தாந்தக் கல்வியை வரலாறு, தத்துவம், ஒப்பீடு என்ற மூன்று வகையில் கற்பிக்க வேண்டும் என்று வரையறை செய்து பாடத்திட்டம் வகுக்க, தருமை ஸ்ரீலஸ்ரீ குருமணிகள் கட்டளையிட்டார்கள்; அக்கட்டளைக் கிணங்க ஏழுமையங்களிலும் சென்ற ஆண்டில் தக்க அறிஞர்களைக் கொண்டு அனைத்துச் சமயத் தத்துவக் கல்வி கற்பிக்கப்பட்டது. மக்கள் ஆர்வமும் பயிற்சியில் முயற்சியும் காட்டிச் சிறந்த முறையில் தேர்ச்சியும் அடைந்துள்ளமை பெருமகிழ்ச்சியைத் தருகிறது.

ஆற்றுப்படுத்தலும் வேண்டுகோளும் :

உலகு தழுவிய கொள்கைகளை உயர்சிந்தனையுடன் குழைத்துத் தக்கவர் பயிற்றுவிக்கும் இக்கல்லூரிகளின் பயன் நாடெலாம் விளையும் என்பது எமது நம்பிக்கை; இவற்றை வாழ்த்துவதிலும், குருவருளும் திருவருளும் துணைக் கூட்டப் பணியாற்றுக என்று வேண்டிக் கொள்வதிலும், இவற்றில் பயிலும் மாணாக்கர்கள், தாம் கற்ற தரமான தத்துவக்கல்வியினால் நாடு வளர - சமுதாயம் ஓங்கப் பாடுபடுக என்று ஆற்றுப் படுத்துவதிலும், ''ஞான சம்பந்தம்'' மகிழ்வும் பெருமிதமும் அடைகின்றது. 1—7—88 அன்று மயிலாடுதுறையிலும், இவ்வாறே ஜூலை மாதம் முதல் பிற நகரங்களிலும் கல்லூரிகள் மீண்டும் திறக்கப் பெறுகின்றன. தத்துவக் கல்வி - கற்றுத் தமிழகம் பெரும்பயன் பெறுக. அடுத்துப் பாரத தேசம் முழுவதும் இபபணியும் பயனும் வளர்க. அடுத்து அனைத்துலகத்திலும்வளர்ந்து பயன்விளைகஎன்பதே ஞானசம்பந்தம் இதழின் பெருவிருப்பம்.

" செறிதரும் உயிர்தொறும் திகழ்ந்து மன்னிய
மறுவரும் அரனிடம் மரபின் மேவிய
அறுவகை நெறிகளும் பிறவும் ஆக்கிய
இறைவிதன் மலரடி இறைஞ்சி ஏத்துவாம் "

— பரஞ்சோதி முனிவர்.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற

"திருமுறைகளும் சைவசித்தாந்தமும்"

என்னும் கருத்தரங்கில் வழங்கியருளிய

ஆசியுரை

25—3—1988

" ஆசையறாய் பாசம்விடாய் ஆனசிவபூசை பண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீநினையாய் — சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய் "

— ஸ்ரீ குருஞானசம்பந்தர்.

பிறவி நோய் :

பிறவியைக் கடலாக, அதிலும் பெருங்கடலாகச் சொல்லுகிறார் திருவள்ளுவர். இது பொதுமறைக் கருத்து; பிறவியைப் பொல்லாப் பெருங்கடல் எனக் கூறுகிறார் நம்பியாண்டார் நம்பிகள். இது சிறப்புமறையாகிய திருமுறைக் கருத்து. கரை காணாதிருப்பது கடல். அதேபோல் வினையால் பிறவியும் பிறவியால் வினையும் எனக் காரண காரியத் தொடர்ச்சியாய்க் கரையின்றி இருப்பது பிறவி. எனவேதான் பொதுமறையும் சிறப்புமறையும் பிறவியைப் பெருங்கடல் என்றும் பொல்லாப்பெருங்கடல் என்றும் பேசின. பிறவியை நோயாகவும் பெரியோர்கள் பலரும் கூறியுள்ளனர். திருநாவுக்கரசர் பிறவிநோயைத் 'தீரா நோய்' என்று செப்பியுள்ளார் வைத்தீசுவரன்கோயில் இறைவனின் திருப்பெயர் பவரோகவைத்தியநாதர் என்பது. பவம் என்றால் பிறவி; ரோகம் என்றால் நோய். பிறவிநோயைத் தீர்த்தருள்வதால் அங்குள்ள இறைவன் பவரோகவயித்தியநாதர் என்றும் வயித்திய நாதர் என்றும் வழங்கப்பெறுகிறார்.

ஆசையே ஆணிவேர் :

இப்பிறப்பு அவிச்சை என்னும் காரணத்தால் உண்டாகிறது. அவிச்சை என்பது அறியாமை. இதனைத் திருவள்ளுவர்,

> ' பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
> செம்பொருள் காண்ப தறிவு "

என்னும் குறளில் விளக்குகின்றார். பேதைமையால், அதாவது அறியாமையால் பிறப்பும், செம்பொருளால் - அதாவது இறையருளால் சிறப்பும் உளவாகின்றன என்பது கருத்து. ஈண்டுச் சிறப்பு என்பது வீட்டின்பத்தைக் குறிக்கிறது. எனவே பேதைமையும் செம்பொருளும் காரணங்கள் ஆகின்றன; பிறப்பும் வீட்டின்பமும் காரியங்களாகின்றன. பிறப்பிற்குக் காரணமாகிய அறியாமையிலிருந்தே ஆசை உண்டாகிறது. எனவே அறியாமை ஆசைக்குக் காரணமாகிறது. இதனையும் திருவள்ளுவர்,

> '' அவா என்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
> தவாப் பிறப்பீனும் வித்து "

என்று கூறுகிறார். இங்ஙனம் அறியாமையினால் தோன்றிய ஆசையின் அடிப்படையில் உண்டாகும் பிறப்பு அளவில என்னும் கருத்தில் அருணகிரிநாதர்,

> ' எழுகடல் மணலை அளவிடின் அதிகம்
> எனதிடர்ப் பிறவி அவதாரம் "

என்று இயம்புகின்றார்.

ஞானத் தமிழ்த் தோணி :

இவ்வாறாகப் பிறவியைப் பெருங்கடல் என்றும் அளவில என்றும் தீரா நோய் என்றும் கூறிய பெரியோர்கள் இதனைக் கடப்பதற்குரிய வழியையும் விளக்கியுள்ளனர். இறைவனின் திருவடியைச் சேர்ந்தவர் - இடைவிடாது நினைத்தவர் பிறவிப் பெருங்கடலை நீந்துவர்-கடப்பர் என்றும் திருவடியைச் சேராதவர் பிறவிப் பெருங்கடலை நீந்தார் - கடக்கமாட்டார்கள் என்றும் திருவள்ளுவர் கூறியுள்ளார். பிறவி எனும் பொல்லாப் பெருங் கடலை நீந்துதற்குத் துறவி எனும் தோல் தோணியாயிருப்பது புனல்காழிச் சம்பந்தன் ஞானத்தமிழே என்று நம்பியாண்டார் நம்பிகள் செப்புகின்றார். திருவள்ளுவர் கூறுவது போன்று இறைவனின் திருவடியைப் பற்றுதல் எல்லோராலும் இயலாது;

தகுதியுடையோர்க்கே வாய்ப்பது. ஆனால் நம்பிகள் இயம்புவது போல ஞானசம்பந்தரின் ஞானத்தமிழை ஓதுவது மிக மிக எளிதாக வாய்க்கக் கூடியதாகும்.

குறிக்கோளை மறந்த குவலயம் :

எனவே, கிடைத்த பிறவியைக் கொண்டே இறையருளால் அப்பிறவியை அறுக்கத் தலைப்பட வேண்டும் என்பது கருத்து. இதனை, யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர், தாம்எழுதிய பாலபாடத்தில், "இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது கடவுளை வழிபட்டு முத்தி இன்பம் பெறுதற்பொருட்டேயாம்" என்று கூறியுள்ளார். இப்பிறவியின் தலையாய குறிக்கோள், இறைவனை முறையாக வழிபட்டு முத்தி இன்பம் பெறுதலேயாகும் இதனைப் பலரும் அறியாமலும், அறிந்தும் மறந்து வாழ்கின்றனர். வேளாண்மை செய்வோன், நெல்பயிரை வளர்த்தலையே முதன்மையான குறிக்கோளாகக் கொண்டு செயல்புரிகின்றான். இடையில் வரப்பில் வெண்டை, துவரை, உளுந்து போன்ற பயிர்களையும் பயிர் செய்கின்றான். இந்நிலையில் இவன் பாய்ச்சும் நீரில் புல்லும் வளர்ந்து விடுகிறது இவற்றைப் பயன்கொள்கிறான் மனிதன். அவற்றோடு நின்றுவிடுவதில்லை. நெல்லையே முக்கியப் பொருளாகப் பெறுகிறான். வேளாளன் முயற்சி வெண்டையும், துவரையும், புல்லுமல்ல; நெல்லே. அதுபோலப் பிறப்பின்பயனும் சிறுசிறு இன்பங்களை இடைஇடையே அனுபவித்தாலும் முக்கிய குறிக்கோள் பிறவியைஅறுத்தலாகவே இருக்கவேண்டும். இதனைப் பலரும் மறந்து உடம்பை வளர்க்கவே பாடுபடுகின்றனர். "உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" என்ற திருமூலர் வாக்கின்படி உயிரை வளர்க்கவே உடம்பை வளர்க்கிறோம் என்ற உணர்வு நம்மிடையே பெருகவேண்டும்.

ஆசை அறுமின்கள் :

இவை அனைத்தையும் உளங்கொண்ட நமது ஆதீன ஆதி குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர், இப்பிறவி நீங்குதற்குரிய வழிகளைத் தெளிவாகவும் எளிதாகவும் அருளியுள்ளார்கள். ஆரம்பத்தில் ஓதப்பெற்ற 'ஆசையறாய்' என்று தொடங்கும் பாடல் இவ்விளக்கத்தைத் தருகிறது. 'ஏ மனமே!' என்று மனத்தைப் பார்த்துக் கூறுவதாக அமைந்துள்ளது இப்பாடல். பிறவிப் பிணி நீங்கி முத்தி இன்பம் பெறவேண்டுமா? ஆம் எனில், ஆசையை அறவே விட்டாயா? என்று கேட்டுப் பின்னும் அதற்குக் காரணமான பாசத்தை அதாவது ஆணவத்தின் வெளிப்பாடான அறியாமையை விட்டாயா? என்று வினவுகிறார். எனவே பிறவி நீங்க வேண்டுமானால் ஆசையை விடவேண்டும் என்பது கருத்தாகிறது. இதனையே திருமூலர்,

" ஆசை அறுமின்கள்! ஆசை அறுமின்கள்!
ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள் "

என்று விளம்பினர். ஈண்டு, " ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள் " என்னும் தொடருக்குப் பலரும் இறைவன் மீது ஆயினும் ஆசையை விட்டுவிடுங்கள் என்று பொருள் கண்டனர். இது சரியல்ல. ஈசனோடு கலந்துள்ள உயிர்களுக்கும் ஒரோவழி வாசனா மலத்தால் ஆசை வரும்; அப்பொழுது ஆசை உயிரைப் பற்றுமல் பஞ்சாக்ஷர ஜபம் செய்து வராமல் தடுத்துக் கொள்ள வேண்டும். என்று வற்புறுத்துவாராகத் திருமூலர், "ஈசனோடு ஆயினும் ஆசைவரும், அப்போது விழிப்பாக இருந்து அகற்றுங்கள்" என்று கூறினர். சிவஞானபோதத்தின் பன்னிரண்டாம் சூத்திரமும் இக்கருத்தையே "செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா அம் மலம் கழீஇ" எனத் தெரிவிக்கிறது.

திருமுறைகள் - தாய் :

இங்ஙனம் ஆசையறவேண்டுமானல் ஆணவமாகிய பாசத்தின் வலிமை கெடவேண்டும். ஆணவ வலிமை கெடவேண்டுமானல் சிவபூசையை இடைவிடாது செய்தல் வேண்டும் என்றார். ஓராண்டு; ஈராண்டு என்று அல்ல, பல ஆண்டுகள் - ஏன்? பல ஊழிகள் பல பிறவிகளிலும் சிவபூசை செய்தல் வேண்டும் என்கிறார். ஏனெனில் பல ஆண்டுகள் - பல பிறவிகள், இடைவிடாது சிவபூசையினை ஒன்றியிருந்து செய்தால் தான் ஞானம் சிறிது கைகூடும் என்பது கருத்து. இதனைச் சைவசமயநெறிக் குறள்,

" பல்லூழிகாலம் பயின்று அரனை அர்ச்சிக்கில்
நல்லறிவு சற்றே நகும் "

என்று கூறுகிறது. ஈண்டு நல்லறிவு என்பது சிவஞானம். சிவபூஜை செய்வதற்கு அடிப்படையாக, குருமூர்த்திகள் வாயிலாக ஐந்தெழுத்து மந்திர உபதேசம் பெறவேண்டும் என்று அடுத்து மொழிகின்றார். இவ்வுபதேசம் பெற முதற்கண் மனம் பண்பட்டிருத்தல் அவசியம் என்பாராக, அதற்குரிய நிலையில் சினத்தைத் தவிர்த்து வாழவேண்டும் என்கிறார். இத்தகைய படிநிலைகளை ஒன்றன்பின் ஒன்ருகப் பெறுதற்கு அடிப்படையாக முதலில் திருமுறைகளை ஓதுக என்றார். இங்ஙனம் எல்லாம் செய்யாத மனமே? உனக்கு வாய் எதற்கு? என்று ஏளனமாகக் கேட்கிறார்.

இப்பாடலில் குருமுதல்வர் சினம் தவிரவும் ஐந்தெழுத்து மந்திரத்தினை நெஞ்சில் எஞ்ஞான்றும் நினையவும் சிவபூசையை முறையாக இடைவிடாது செய்யவும் அவற்றின் வழி ஆணவம் அடங்கவும் அதனல் ஆசை அறவே அகலவும் இறையருளால்

பிறவிப்பிணி நீங்கி உயிர்முத்தி இன்பம்பெறவும் வாய்க்கும் என்பது பாடலின் தெளிபொருள். இவ்வளவுக்கும் அடிப்படையாகத் தாய்போல் நின்று துணைபுரிவன திருமுறைகள் என்றும் அவற்றை உணர்ந்து ஓதுக என்றும் உணர்த்துகிறார். இப் பாடலில், "திருமுறைகள் ஓதாய்" என்றும், "திருமுறைகளோ தாய்..." என்றும் இருபொருள்படுமாறு அருளியிருப்பது குருமூர்த்திகளின் அருள் நலத்தைக் காட்டுவதாயுள்ளது. எனவே பிறவிப்பிணி நீங்கத் துணைசெய்யும் தாயாக விளங்குவன திருமுறைகள் என்பது குருமுதல்வரின் அறவுரையாகும்.

திருமுறை - சொற்பொருள் :

இனி இத்திருமுறைகள் பற்றிச் சிந்திப்போம். "திருவே! என் செல்வமே! என்ற தாண்டகத்தில் இறைவனைத் 'திரு' என்னும் சொல்லால் அழைத்தனர் 'திரு' என்னும் சொல், "கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம்" என்னும் பொருளது என்பார் திருக்கோவையாரின் உரையாசிரியராகிய பேராசிரியர். இறைவன் ஒருவன் தான் காணும் உயிர்களால் மென்மேலும் காணவேண்டும் என்னும் தன்மையைப் பெற்றவன். எனவே திருவாக இலங்கும் பரம்பொருளை அடைதற்குரிய முறைகளை விளக்கும்நூல் திருமுறை எனப்பெற்றது. 'முறை' என்னும் சொல். 'நூல்' என்னும் பொருளை உடையது. இதனைக் கச்சியப்பர் தாம் எழுதிய கந்த புராண அவையடக்கச் செய்யுளில் குறிக்கின்றார்.

> "இறைநிலம் எழுதும்முன் இளைய பாலகன்
> முறைவரை வேன்என முயல்வது ஒக்குமால்
> அறுமுகம் உடையவோர் அமலன் மாக்கதை
> சிறியதோர் அறிவினேன் செப்ப நின்றதே"

என்னும் பாட்டில், இளைய பாலகன், தான் எழுதக் கற்குமுன்பே நூல் எழுதுவேன் என்று முனைவது போலச் சிறிய அறிவினேன் முருகன் மாக்கதையினை எழுதப்புகுவது ஆகும் என்று கூறுகின்றார். இதில் 'முறை' என்னும் சொல் நூல் என்னும் பொருளைத் தந்து நிற்கிறது.

பன்னிரண்டு திருமுறைகள் :

இத்திருமுறை 12 எனத் தொகுத்தனர் முன்னோர். முதல் மூன்று திருமுறைகளும் திருஞானசம்பந்தரால் அருளிச் செய்யப் பெற்ற பாடல்களைக் கொண்டன. 384 பதிகங்களாக 4181 பாடல்களைக் கொண்டன. 4, 5, 6 ம் திருமுறைகள் அப்பர் அருளிச் செய்தன. 313 பதிகங்களாக 3066 பாடல்களைக் கொண்டன. ஏழாவது திருமுறை சுந்தரரால் அருளப்பெற்றது. 100 பதிகங்களாக 1026 பாடல்களைக் கொண்டது. இவ்வேழு திருமுறை

களுக்கும் 'தேவாரம்' என்றும் 'அடங்கன்முறை' என்றும்பெயர்கள் உள்ளன. தேவாரம் என்னும் சொல்லைத் தே+வாரம் என்று பிரிக்கலாம். தே என்றால் தெய்வம் என்றும் வாரம் என்றால் அது தெய்வத்திடம் அன்பினை விளைவிப்பது என்றும் பொருளைத்தருவன. 'வாரம்' என்னும் சொல்லுக்கு 'அன்பு என்னும் பொருளோடு உரிமை என்னும் ஒருபொருளும் உண்டு. உயிர்கட்கும் இறைவனுக்கும் உள்ள உரிமையைப் புலப்படுத்தும் நூல் எனப் பொருள் தரும். இங்ஙனம் இன்றி, தே+ஆரம் என்று பிரித்து தெய்வத்தின் மீது பூமாலை சார்த்தி வழிபடுவது போலப் பாமாலை சூட்டி வழிபடுவதும் சிறப்புவழிபாடு என்னும் பொருளையும் கொள்ள நிற்கிறது.

'அடங்கன் முறை' என்று கூறுவது, இவற்றைப் படித்து மனம் அடங்க வேண்டும்; அத்தகைய மன அடக்கத்தைத் தரும் தன்மையது என்னும் பொருளதாகும். 'மனம் அடங்கக் கல்லார்க்கு வாய் ஏன்?' என்று தாயுமானர் வினவுவது போன்று கற்றல் எனில் மனம் அடங்க வேண்டும் என்றும் அத்தகைய அடக்கத்தை தரும் தகுதிபடைத்து உயிர்களை முறைப்பட வாழ வைப்பது, அடங்கன்முறை' என்றும் வழங்கலாயிற்று.

இத் தேவாரத்தில் உள்ள ஏழு திருமுறைகளையும் பிரித்துத் தனித்தனியே திருஞானசம்பந்தர் பாடிய பதிகங்கள் 'திருக் கடைக்காப்பு' என்றும், திருநாவுக்கரசர் பாடிய பதிகங்கள் 'தேவாரம்' என்றும், சுந்தரர் ஓதிய பதிகங்கள் 'திருப்பாட்டு' என்றும் வழங்குவது சைவசமய மரபு.

எட்டாம் திருமுறை திருவாசகம், திருக்கோவையார் என இருபிரிவாக அமைந்துள்ளது. அவற்றுள் திருவாசகம் 51 பகுதிகளாகவும் 656 பாடல்களாகவும் அமைந்தது திருக்கோவையார் 400 பாடல்கள் கொண்டிலங்குவது இதனை அருளியவர் மாணிக்க வாசகர். எட்டாம் திருமுறைவரை அருளிச்செய்த ஆசிரியர் நால்வரும் சமயாசாரியர் எனப்பெறுவர். ஒன்பதாம் திருமுறை திருஇசைப்பா, திருப்பல்லாண்டு என இருபிரிவாக இலங்குகிறது. அவற்றுள் திருஇசைப்பா 28 பதிகங்களாகவும் 288 பாடல்களாகவும் விளங்குகிறது திருப்பல்லாண்டு ஒருபதிகமாகவும் 13 பாடல்களாகவும் உள்ளது. இத்திருமுறையை அருளிச்செய்த ஆசிரியர்கள் ஒன்பதுபேர் பத்தாந்திருமுறை இருபத்தெட்டு ஆகமங்களின் சாரம். ஒன்பது தந்திரங்களாக இது அமைந்துள்ளது. இதனை அருளியவர் திருமூலர் இதில் 3000 பாடல்கள் உள்ளன. பதினோராம் திருமுறை 40 பிரபந்தங்களாகவும் 1416 பாடல்களாகவும் அமைந்துள்ளது. இதனை அருளிச் செய்தவர்கள் பன்னிரண்டு

ஆசிரியர்கள். பன்னிரண்டாம் திருமுறை சேக்கிழாரால் அருளப் பெற்றது. 2 காண்டங்களாகவும் 13 சருக்கங்களாகவும் 4286 செய்யுட்களாகவும் அமைந்து 63 தனியடியார்களின் பெருமை யையும் 9 தொகை அடியார்களின் சிறப்பையும் உள்ளவாறு உணர்த்துவது.

பன்னிரு திருமுறைகளையும் அருளிய ஆசிரியர்கள் இருபத் தெழுவரும் இருபத்தேழு நட்சத்திரங்களைப் போலத் திகழ் கின்றனர். பன்னிருதிருமுறைகளும் பன்னிரு சூரியர்களைப் (இராசி) போல படிப்போர் உள்ளத்தில் அறியாமை இருளகற்றி ஞான ஒளிவிளக்குகளாகத் திகழ்கின்றன.

திருமுறைகளில் சைவசித்தாந்தக் கூறுகள் :

இத்திருமுறைகளில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் பரவலாக வும் நுட்பமாகவும் காணக்கிடைக்கின்றன. சான்றாக ஒன்றிரண்டு திருமுறைகளைச் சிந்திக்கலாம்

இறைவன் ஒன்றாய் வேறாய் உடனாய் இருந்து உயிர்களுக்கு அருளுகின்றான் என்று சைவசித்தாந்த நூல்கள் கூறுகின்றன. உடலும் உயிரும் போல் கலப்பினால் ஒன்றாயும், கண்ணொளியும் கதிரவன் ஒளியும் போல் பொருள் தன்மையால் வேறாயும் கண்ணொளியும் உயிர் அறிவும் போல் உடனாயும் இருக்கின்றான் என்று உவமைகள் மூலம் அந்நூல்கள் அறிவிக்கின்றன. உடலும் உயிரும் இரண்டாகத் தோன்றா! ஒன்றாகவே இயங்கும், எனினும் அவை இரண்டே ஆம்! அதுபோல உயிரும் இறைவனும் இணைந்து பிரித்துக்காண இயலாமல் இருக்கும்பொழுது ஒன்றாய் இருக் கின்றான்.

சூரிய ஒளி காட்டும் ஒளியாகவும் கண் ஒளி காணும் ஒளியாக வும் இருக்கின்றன. அதுபோல இறைவன் காட்டும் உதவியைச் செய்து உயிரைக் காண வைக்கின்றான். இது வேறாய் இருப்பது. கண் ஒன்றைக் காண்பதுபோல் தோன்றினாலும் உயிர் இல்லையேல் எதனையும் பார்க்க இயலாது; அதுபோல இறைவன் அருள் உடன் இல்லையேல் உயிர் எதனையும் அறிய ஒண்ணாது என்ற வகையில் உடனாய் இருக்கின்றான். இக்கருத்துக்களைச் சித்தாந்த நூல்களுக்கு அடித்தளமாகத் திருஞானசம்பந்த சுவாமிகள் திருவீழிமிழலைத் தேவாரத்தில்,

" ஈறாய் முதல்ஒன்றாய் இருபெண்ஆண் குணமூன்றாய்
மாறாமறை நான்காய் வருபூதம் அவைஐந்தாய்
ஆறார்சுவை ஏழோசையோடு எட்டுதிசை தானாய்
வேறாய் உடனானான் இடம் வீழிமிழலையே '

என்று அருளுகின்றார். இதில் ஈறாய் முதல் ஒன்றாய் இலங்கும் பெருமான் ஆணும் பெண்ணுமாய், குணங்கள் மூன்றாய் நான்கு மறைகளாய் ஐம்பூதங்களாய் அறுசுவைகளாய் ஏழு ஓசைகளாய் எட்டுத்திசைகளாய் இருக்கின்றான் என்று கூறுவதில் இறைவன் இங்ஙனம் எல்லாப் பொருள்களிடத்தும் கலப்பினால் ஒன்றாய் இருக்கின்றான் என்பதனைக் காட்டிப் பின்னும் வேறாய் உடனாய் நின்று உயிர்கட்கு உதவுகின்றான் என்றும் கூறுகின்றார்.

திருஞானசம்பந்தர் மற்றுமொருபாடலில், "விளையாததொர் பரிசில் வரு பசு பாசம் வேதனை ஒண்தளையாயின தவிரவருள் தலைவன்" என்று கூறுவதில் உயிர், மாயை, கன்மம், ஆணவம், இறை என்னும் ஐந்து பொருள் உண்மையை விளக்கியுள்ளார்.

"விளையாத தொர்பரிசில் வருபசு பாச வேதனை ஒண்
தளையாயின தவிர அருள் தலைவன் அது சார்பாம்
களையார்தரு கதிர் ஆயிரம் உடைய அவனோடும்
முளைமாமதி தவழும் உயிர்முது குன்றடைவோமே"

என்பது அப்பாடல்.

திருமந்திரத்தில் திருமூலர் காலத்தால் மிக முன்னோடியாக, பதி, பசு, பாசம் எனக் கூறும் மூன்று பொருள்களில் பதியினைப் போலவே பசுவும் பாசமும் அநாதி என்று விளக்கி, மேலும், பதியைச் சென்று அடையாப் பசுவும் பாசமும் என்றும் பதியே வந்து கருணையுடன் பசுவை அணுகினால் ஆண்டுப் பாசம் நில்லாது என்றும் எளிய சொற்களில் சுருக்கமாக விளக்கியுள்ளார்.

"பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல் பசுபாசம் அநாதி
பதியினைச் சென்று அணுகாப்பசு பாசம்
பதிஅணுகில் பசு, பாசம் நில்லாவே"

என்பது அப்பாசுரம்.

இங்ஙனம் திருமுறைகளில் ஆங்காங்கு விரிவாகவும் விளக்கமாகவும் சைவசித்தாந்தக் கருத்துக்கள் காணப்பெறுகின்றன.

வாழ்த்து :

இவற்றைத் தெளிய அறிந்துணர ஏற்படுத்தியுள்ள இக்கருத்தரங்கம் இனிதே நிகழவும், இதில் பங்குபற்றியுள்ள அறிஞர்கள் பலரும் இதனை முன்னின்று நடத்தும் துணைவேந்தர் உள்ளிட்ட சான்றோர்களும் எல்லா நலன்களும் பெற்று நீடு வாழவும் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

திருமுறை போற்றிக்
கருமுறை அறுப்போம்!

"தோத்திர சாத்திர ஒப்பாய்வுக் கருத்தரங்கம்"

தருமைஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர்குருபூஜை விழாவில் தருமை ஆதீனம அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில், 27, 28, 29—5—88 ஆகிய நாட்களில் ஆதீனத் திருமடத்து ஆகமக்கட்டில் 'தோத்திர சாத்திர ஒப்பாய்வுக் கருத்தரங்கம்' மிகச் சிறப்பாக நடைபெற்றது.

27—5—88 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு, சீர்காழி திரு. S. திருஞானசம்பந்த ஓதுவார் கடவுள் வாழ்த்து பாட தொடங்கியது. ஆய்வு நிறுவன இயக்குநர் திரு. T. N. இராமச்சந்திரன் அவர்கள் வரவேற்புரை நல்கினர்.

தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கினர்கள். முதன்மையுரை திருமுறை ஆராய்ச்சிக் கலைஞர் கலைமாமணி பேராசிரியர் வித்துவான் திரு. க. வெள்ளைவாரணனர் நிகழ்த்தினர்கள். முதல் அமர்விற்குத் தொண்டை மண்டல ஆதீனம் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் வாழ்த்துரை வழங்கியருளினர்கள். தஞ்சை, தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் திரு. ச. அகத்தியலிங்கம் அவர்கள் தலைமையேற்று, சைவ சித்தாந்தத் தொன்மையை விளக்கினர். தருமை ஆதீனக் கலைக்கல்லூரிப் பேராசிரியர், டாக்டர் திரு. இரா. செல்வக்கணபதி அவர்கள் திருஞானசம்பந்தரும் உமாபதிசிவமும் என்ற தலைப்பில் கட்டுரை வாசித்தார். 28—5—88 சனிக்கிழமை காலை 10 முதல் 1 மணிவரை இரண்டாம் அமர்வு மதுரைக் காமராசர் பல்கலைக்கழகச் சைவசித்தாந்தத்துறை தலைவர் டாக்டர் டி. பி. சித்தலிங்கையா தலைமையேற்க நிகழ்வுற்றது. சென்னை வைணவக் கல்லூரிப் பேராசிரியர், டாக்டர் திரு. பி. எஸ். சோமசுந்தரம் அவர்கள் திருஞானசம்பந்தரும் மெய்கண்டாரும் என்ற தலைப்பிலும், சென்னை சைவசித்தாந்தப் பெருமன்றத் துணைத்தலைவர் சி. என். சிங்காரவேலு அவர்கள் திருநாவுக்கரசரும் உமாபதிசிவமும் என்ற தலைப்பிலும் கட்டுரை வாசித்தனர். அன்று பிற்பகல் மூன்றும் அமர்வில் இந்நிறுவன இயக்குநர் தலைமையேற்க டாக்டர் திரு. ஆனந்தராசன் (மதுரை காமராசர் பல்கலைக் கழகம்) சுந்தரரும், மெய்கண்டாரும் என்ற தலைப்பிலும், டாக்டர் திரு. எஸ். கங்காதரன், (மதுரை காமராசர் பல்கலைக் கழகம்) சுந்தரரும், உமாபதிசிவமும் என்ற தலைப்பிலும் கட்டுரை வழங்கினர்.

29—5—88 நான்காம் அமர்விற்கு மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் தலைமையேற்றார்கள். டாக்டர் திரு. டி. பி. சித்தலிங்கையா அவர்கள் மாணிக்கவாசகரும், மெய்கண்டாரும் என்ற தலைப்பிலும் டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள் மாணிக்கவாசகரும், அருள்நந்திசிவமும் என்ற தலைப்பிலும் கட்டுரை வழங்கினர். அன்று பிற்பகல் ஐந்தாம் அமர்விற்கு மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் தலைமையேற்றனர். திரு. சி. சு. மணி அவர்கள் கீழை நாட்டுச் சாத்திரங்கள் என்ற தலைப்பிலும், டாக்டர் திரு. மு. சிவச்சந்திரன் அவர்கள் கீழை நாட்டுத் தோத்திரங்கள் என்ற தலைப்பிலும் கட்டுரை வழங்கினர். மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் நிறைவுரை ஆற்றிச் சிறப்பித்தார்கள். ஆராய்ச்சி நிறுவனப் பதிவாளர் திரு. சொ. முத்தையன் நன்றியுரை கூறினர். சீர்காழி திரு. எஸ். திருஞானசம்பந்த ஓதுவார் வாழ்த்துப் பாடினர். கருத்தரங்கம் இனிதே முடிவுற்றது.

சைவசித்தாந்த மாலைநேரக் கல்லூரி

தருமை ஆதீனம் அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் நடத்தப்பட்டு வரும் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி கனகாபிஷேக நினைவு சைவசித்தாந்த மாலைநேரக் கல்லூரி 1987–1988 இளயபுலவர் தேர்வு முடிவுகள்.

பாளையங்கோட்டை மையம் :	101-111; 113-119;
மதுரை மையம் :	120-129; 131, 133-137; 139-144, 145சி, 145டி, 145இ;
திருச்சிராப்பள்ளி மையம் :	146-153; 155-160; 164, 164எ
மயிலாடுதுறை மையம் :	165, 166, 168, 169, 171-173, 176-180; 182-188; 190-193; 195, 196, 198, 20 , 201, 203-206, 208, 211-213; 215, 216.
சென்னை மையம் :	217-223; 225-230; 232-237; 239-241; 243, 244, 297.
காரைக்கால் மையம் :	245-259; 261-264; 267-276.
சிதம்பரம் மையம் :	277-282; 284-285, 287, 288, 290-295.

குருபூஜைத் திருநாள் கொலுக் காட்சியில்
தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்

திருச்சிராப்பள்ளி, திரு. ஏ. கே. சி. நடராசனுக்குத்
"தருமை ஆதீன இசைப்புலவர்" என்னும் பட்டம் வழங்கி ஆசியருளல் - 5—6—88

பட்டினப்பிரவேசத் திருநாள்

ஸ்ரீ சொக்கநாதர் சந்நதியில்

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம்

டாக்டர் திரு. சீர்காழி கோ. சிவசிதம்பரத்திற்கு
"தருமை ஆதீன இசைப்புலவர்"
என்னும் பட்டம் வழங்கி ஆசியருளல்
6—6—88

அபிராமி அந்தாதி

டாக்டர் புலவர் திரு. K. சந்தானராமன் M.A. D., Lit., Ph.D, D. P. P. A., D, U. N., I, U.
பருத்தியூர்.

கோமள வல்லியை, அல்லியந் தாமரைக் கோயில்
யாமள வல்லியை, ஏதம் இலாளை எழுதரிய [வைகும்
சாமள மேனிச் சகலகலா மயில் தன்னைத் தம்மால்
ஆம் அளவும் தொழுவார் ஏழு பாருக்கும் ஆதிபரே. 96

அ. கோமளவல்லி, அல்லியந் தாமரைக் கோயில் வைகும் யாமள வல்லி.

(1) அபிராமி மெல்லிய கொடி போன்றவள். புறவிதழ்களை உடைய தாமரை மலராகிய கோயிலில் வீற்றிருக்கும் யாமள வல்லியும் அவளே.

(2) 'கோமளம்' என்றால் மென்மை. மெல்லிய கொடிபோன்ற அம்பிகையினை, கோமளவல்லி என்றார். அம்பிகைக்குரிய கோமள வல்லி மற்றும் தையல்நாயகி என்ற பெயர்களைத் தற்காலத்தில் பெரும்பாலும் வைணவர்களே பெண்களுக்கு இடுகின்றனர்.

(3) யாமள சாஸ்திரம் என்பது அம்பிகை பற்றிய ஆகம நூல், 'ருத்ரயாமளம்' என்று குறிப்பிடப்படும் அந்த ஆகமத்தைச் சிவபெருமானே உரைத்தார். ருத்ரயாமளத்தால் புகழப்படும் கொடி போன்ற அம்பிகையை யாமளவல்லி என்றார்.

(4) ஆதாரக் கமலங்கள் உள்ளிட்ட தாமரை மலர்களில் விருப்புற்று வீற்றிருக்கும் அவளைத் தாமரைக் கோயில் வைகும் யாமளவல்லி என்றார். கடவுள் இருக்குமிடம் என்பதால் தாமரை கோயில் என்று புகழப்பட்டது.

ஆ. ஏதம் இலாள்; எழுதரிய சாமள மேனிச்
சகலகலாமயில்.

(1) குற்றம் இல்லாதவள் அம்பிகை. ஓவியமாக எழுதவியலாத சியாமள நிறத்தினை உடையவளும் எல்லாக் கலைகளையும் உடைய மயில் போன்றவளும் ஆவாள்.

(2) 'ஏதம்' என்றால் குற்றம் என்று பொருள். பராசக்தியான அம்பிகை எந்தக் குற்றமும் இல்லாதவள். மும்மலங்களாகிய குற்றமும் அவை பத்து இந்திரியங்களுடன் இணைந்து உண்டாகும் முப்பது குற்றங்களும், அவை மேலும் பலமடங்காகி விளையும் எண்ணற்ற குற்றங்களும் உயிர்களுக்கு மட்டுமே உண்டு. கடவுளுக்கு இல்லை.

எனவே அம்பிகையின் சகஸ்ரநாமம் 'நிர்மலா' – 'குற்ற மற்றவள்' என்கிறது. "நிர்மலே!" என்று காளிதாசனின் சியாமளா தண்டகமும் அழைக்கிறது.

(3) அடியார் துயர்களை உடனே களைந்து விடுவதாலும், அவர்கள் கேட்பதற்கு முன்பே அருள் செய்து விடுவதாலும், அவர்களைக் கைவிடாததாலும் அவள்பால் யாரும் குற்றம் கூற இயலாதவள். ஆதலால் 'ஏதம் இலாள்' என்றார்.

(4) அவளே ஓவியத்தில் எழுதவியலாத உருவமுடையவள். சகலகலைகளையும் தனக்குத்தோகையாகப்பெற்ற மயில்போன்றவள்; 'சதுசஷ்டி கலாமயி', 'கலாவதி' என்பன அவளது நாமங்கள். அக்கினி கலைகள் முதல் துரியகலைகள் வரையுள்ள பன்னிரண்டு வகையான கலைகளை இருபத்தொன்றாம் பாட்டின் விரிவுரையில் கண்டோம். 'சதுசஷ்டிகலா' - என்னும் அறுபத்துநான்கு கலைகள் பாஸ்கரராயரின் உரையின்படி வருமாறு :-

1. மொழிகளை அறிதல். 2. அவற்றை எழுதுதல். 3. அவற்றைப் படித்தல். 4. மொழி இயல் அறிவு. 5. கவிதை இயற்றுதல். 6. கற்றவற்றை நினைவு கொள்ளுதல். 7. ரிக்வேதம். 8. யஜுர் வேதம். 9. ஸாமவேதம். 10. அதர்வணவேதம். (நான்குவேதங்கள்) 11. காந்தர்வம். 12. ஆயுர் வேதம். 13. தனுர்வேதம். (விற்பயிற்சி) 14. அர்த்த சாஸ்திரம். (பொருளாதாரம்) இவை உபவேதங்கள். 15. நியாயம். 16. வைசேஷிகம். 17. ஸாங்கியம். 18. யோகம். 19. மீமாம்சம். 20. வேதாந்தம் - இவை ஆறு சாஸ்திரங்கள். 21. சிக்ஷா. 22. வியாகர்ணம். 23. சந்தஸ். 24. நிருத்தம்.

25. சோதிடம். 26. கல்பம் - இவை வேதாங்கங்கள். 27. தந்திர - புராண - இதிகாச - ஸ்மிருதிகள். 28. காவியம். (நாடகம் அலங்காரம்) 29. தேர்ப்படை. 30. யானைப்படை. 31. குதிரைப் படை. 32. காலாட்படை. (இவைநான்குபோர்த்தொழில்பற்றியது.) 33. ஸாமுத்ரிகா சாஸ்திரம். (தற்கால விரல் பதிவு மற்றும் தடயவியல் போன்றது) 34. மல்வித்தை. (உடற் பயிற்சி) 35. சமயல். 36. காருடம். (விஷ மருத்துவம்) 37. சிற்பம். 38. சித்திரம். 39. காற்று வாத்யம். (துளைக் கருவி) 40. தோல் வாத்தியம். 41. நரம்பு வாத்தியம். 42. உலோக வாத்தியம். 43. வாய்ப்பாட்டு. 44. நடனம். 45. இந்திரஜாலம். 46. சூதாட்டம். 47. திருட்டு. 48. கண்கட்டுவித்தை. 49. தாது பரிட்சை. (கனிம வளம் காணுதல்) 50. ரத்ன பரிட்சை. (மணிகளை அறிதல்) 51. ரஸவாதம். 52. சாந்தி. (மன அமைதி அளிக்கும் கலை) 53. வசியம். 54. பூதபைசாகங்களை விரட்டுதல். 55. வித்வேஷணம். (நண்பனைப் பகையாக்குதல் - இது அரசியலுக்கு மட்டும்) 56. ஆகாச கமனம். (தற்கால Air Travel) 57. ககனப் ப்ரவேசம். (தற்கால Space Researeh) 58. கதிஸ்தம்பம். (நடையை முடக்குதல்) 59. ஜலஸ்தம்பம். (நீரில் நடத்தல்) 60. விநஷ்டிஸ்தம்பம். (மழையை நிறுத்துதல்) 61. அக்னிஸ்தம்பம். (தீயினைச் சுடாமல் செய்தல்) 62. அசைவை நிறுத்தல். 63. ஆயுதஸ்தம்பம். (படைக்கலனைத் தடுத்து நிறுத்தல்) 64. ரேதஸ்தம்பம். (இந்திரியத்தை நிறுத்துதல் - தற்காலக் குடும்பக் கட்டுப்பாடு இயற்கை முறை)

இ. தன்னை ஆமளவும் தொழுவார் ஏழுபாருக்கும் ஆதிபரே. (அதிபர் - ஆதிபர் ஆயிற்று)

(1) மேற்சொன்ன சகலகலா வல்லியினை அவரவர் வசதி வாய்ப்புக்களுக்கு ஏற்ற முறையில் அதிக பட்சம் தொழுபவர் ஏழுலகங்களுக்கும் அதிபர் ஆவார்கள்.

(2) "ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே செல்லும் வாய் எல்லாம் செயல்" என்று அறவினையை இயன்ற விடத்திலெல்லாம் செய்யும்படி வள்ளுவர் வலியுறுத்துகிறார். அவ்வாறே அம்பிகையை அவரவர் தம்மால் இயன்ற அளவுக்குத் தொழுதிட அறிவுறுத்துகிறார். அவ்வாறு தொழுபவர் ஏழுலகங்களுக்கும் அதிபர் ஆவார்.

(3) 'ஆமளவு' (தம்மால் இயன்ற அளவு) என்பது காலதேச வர்த்தமானங்களுக்கு ஏற்ப அமையும். சாக்கிய நாயனுர் கல்லெறிந்தார். அது அவருக்கு 'ஆமளவு'. பசுபதியார் ஸ்ரீருத்ரம் ஓதினுர்.

அது அவருக்கு 'ஆமளவு' ஓடு. கொடுத்தார் திருநீலகண்டர். அது அவருக்கு 'ஆமளவு'.

(4) ஆமளவினை அளவிடுதல் நம்மால்இயன்றது அல்ல. வசதி-வாய்ப்பு-மனநிலை-முற்பிறவித்தவம் போன்றவற்றுக்கேற்ப அதனை திர்ணயிப்பது திருவருளே ஆகும். தம்மால் ஆமளவு தொழ வேண்டியதே நம் கடன் .... ஏழு பாருக்கும் ஆதிபராக்க வேண்டியது அம்பிகை கடன்,

கலைகளில் தேர்ச்சி பெறுதல் இப்பாடலின் பாராயண பலன் ஆகும்.

(தொடரும்)

ஒருவன் காணும் கொல்!

வஞ்சித் தொழுகும் மதியிலிகாள்! யாவரையும்
வஞ்சித்தோம் என்று மகிழன்மின் — வஞ்சித்த
எங்கும் உளன்ஒருவன் காணும்கொல் என்றஞ்சி
அங்கங் குலைவது அறிவு.

கருமமே கண்ணயினர்

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் — செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணயி னர்.

அகமகிழ்க! கருத்தழிக!

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென்று அகமகிழ்க — தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றவெல்லாம்
எற்றே இவர்க்குநாம் என்று.

— ஸ்ரீ குமரகுருபரர்.

கட்டுரை எண். 6.

போதமும் சித்தியும்

டாக்டர். திரு. மு. சிவச்சந்திரன்

உடன்பாட்டுவாக்கியம் என்றும் எதிர்மறை வாக்கியம் என்றும் வாக்கியம் இரண்டு வகைப்படும். இது ஒவ்வொன்றும் ஐந்து உறுப்புக்களையுடையது என்பர். அவை:-

உடன்பாட்டு வாக்கியம்:

1. பிரதிஞ்ஞை, 2. ஏது, 3. திருட்டாந்தம், 4. உபநயம், 5. நிகமனம் என்பன.

இம்மலை நெருப்புடைத்து என்பது பிரதிஞ்ஞை; புகையுடைமையான் என்பது ஏது; அடுக்களை போல யாது புகையுடைத்தோ அது நெருப்புடைத்து என்பது திருட்டாந்தம்; இப்பொருளும் அவ்வண்ணமே என்பது உபநயம்; ஆதலின் இது நெருப்புடைத்து என்பது நியமனம். பிரதிஞ்ஞை என்பது மேற்கோள். ஏது என்பது காரணம்; திருட்டாந்தம் என்பது மேற்கோளுக்கும் ஏதுவுக்குமுள்ள உடன்நிகழ்ச்சியை நேரே காட்டுவது; உபநயம் என்பது ஏதுவைப் பக்கத்திலே கொண்டு போய் முடித்தல்; நிகமனம் என்பது மேற்கோளை நிச்சயித்துக் காட்டுவது.

எதிர்மறை வாக்கியம்:

1. பிரதிஞ்ஞை, 2. ஏது, 3. திருட்டாந்தம், 4. உபநயம், 5. நிகமனம் என்பன.

இம்மலை நெருப்பில்லை என்பது பிரதிஞ்ஞை; புகையின்மையான்என்பது ஏது; தடாகம்போல யாது புகையுடைத்தின்மையேல் அது நெருப்பின்மையுடைத்து என்பது திருட்டாந்தம்; இம்மலையிலும் தடாகம் போலப் புகையில்லை என்பது உபநயம்; புகையில்லையாதலின் இம்மலையிலும் நெருப்பில்லை என்பது நிகமனம்.

இங்ஙனம் உடன்பாட்டு வாக்கியமும் எதிர்மறை வாக்கியமும் ஐந்து ஐந்து உறுப்புக்களையுடையன.

இனி அநுமானத்தில் அடங்கும் பிற அளவைகள் பற்றிச் சிந்திப்போம். 1. பூர்வக்கட்சி அநுமானம், 2. கருதல் அநுமானம் 3. உரை அநுமானம் என்பன.

நாற்றமாகிய காரணத்தைக் கொண்டு பூவினை அறிவது போலவது பூர்வக்கட்சி அநுமானமாகும். ஒருவர் சொல்லும் வார்த்தையைக் கொண்டு அவனறிவின் அளவுணர்தல் போல்வது கருதல் அநுமானம் ஆகும். இப்போது நிகழும் சுகதுக்கங்கள் முற்பிறவியில் செய்த வினைகளின் அதாவது செயல்களின் பயன் என்று ஆகமங்கள் சொல்லுதலால் இங்ஙனம் சுகதுக்கங்களுக்குக் காரணம மேல்பிறவியின் செயல்களே என நூல் வழி அனுமானித்து அறிதல் போல்வது உரை அநுமானமாகும்.

இக்கருத்துக்களைச் சித்தியார் ஆசிரியர்,

"போது நாற்றத் தாலறிதல் பூர்வக் காட்சி அநுமானம்
ஓதும் உரையால் அறிவின் அளவுணர்தல் கருதல்அநுமானம்
நீதியான் முற்கன்மபல நிகழ்வது இப்போதுஇச்செய்தி
ஆதியாக வருபயன் என்றறிதல் உரையால் அநுமானம்"

என்று கூறுகிறர்.

ஆகமப் பிரமாணங்கள் - மூன்றுவகை:

1 தந்திர அளவை, 2. மந்திர உரையளவை, 3. உபதேச உரை அளவை என்பன.

வேதாகமங்களின் உள்ள கருமகாண்டத்தில் சொல்லப்படும் கிரியைகளை அனுட்டிக்கும் வகையைத் தெரிவது தந்திரவுரை அளவையாம். உபாசன காண்டத்தில் கூறப்படும் கடவுள் வழிபாட்டைத் தெரிவது மந்திரவுரை யளவையாம். ஞான காண்டத்தில் இயமபப்படும் பதி பசு பாசங்களின் இயல்பைத் தான் உணருமாறும் பிறர்க்கு உணர்த்துமாறும் தெரிவது உபதேச உரையளவையாம். இக்கருத்துக்களைச் சித்தியார்,

" அநாதியே அமலனை அறிவன் நூல்ஆகமந்தான்
பினுதிமா றின்றிப் பேணல் தந்திர மந்திரங்கண்
மனுதிகள் அடக்கித் தெய்வம் வழிபடும் வாய்மை யாகும்
தனுதியி றிலாதான் தன்மை உணர்த்துதல் உபதேசம் தான் "

என்று இயம்புகிறது.

அனுமானப் போலி என்று எடுத்துச் சித்தியார் வகையும் விரியுமாக அறுபத்தைந்து கூறுகளைக் கூறுகிறது. அவை விரிவஞ்சி ஈண்டு விடப்பட்டன.

நிறைவுரை :

முன்பு சிந்தித்தவாறு மெய்கண்டார், மங்கலவாழ்த்து, அவையடக்கம் என்று இரண்டையும் கூறிப் பின் சூத்திரத்திற்கு விளக்கம் கூறுகின்றார். ஆனால் அருள் நந்திசிவாசாரியார் விநாயகர் வணக்கம் முதலான வணக்கங்கள் பலவற்றையும் கூறி அவையடக்கம் கூறிப் பின்னும் அளவைகள் பற்றித் தெளிவாகவும் விளக்கமாகவும் கூறுகின்றார். இவற்றிற்குப் பின்னே நூற்பா தொடங்குகிறது. இவ்வகையில் சித்தியார் கூறும் அளவைகள் பற்றி ஓராற்றான் இதுவரை சிந்திக்கப்பெற்றது. இனி, தொடர்ந்து, இருநூலாசிரியர்களும் கூறும்நூற்பாக்களின்வழி, கருத்துவிளக்கங்களைக் காணலாம்.

(தொடரும்)

மன்று வழுத்துக!

நீரிற் குமிழி இளமை நிறை செல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள் — நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று.

கெடுவது காட்டும் குறி

நட்புப் பிரித்தல் பகைநட்டல் ஒற்றிகழ்தல்
பக்கத்தார் யாரையும் ஐயுறுதல் — தக்கார்
நெடுமொழி கோறல் குணம்பிறி தாதல்
கெடுவது காட்டும் குறி. — ஸ்ரீ குமரகுருபரர்.

மேலை நாட்டுத் தத்துவ மேதைகள்
(Western Philosophers)

சுவாமி வீரபாகு

(மலர் 47, இதழ் 6, பக்கம் 306 இன் தொடர்ச்சி.)

2. பிளேட்டோ (Plato) - தொடர்ச்சி (8)

(கி. மு. 427-347)

உடல் துன்ப மயமானது :

இவ்வுடல் முடிவற்ற துன்பம் தரும் ஒரு சாதனமாகும். உடலுக்கு நாளும் உணவு தேடித் தரவேண்டும்; இது வியாதிகளுக்கும் ஆளாகக் கூடியது. இஃது ஆசைகட்கும், காமத்திற்கும் அச்சத்திற்கும்-அவதூறுகட்கும், பலவகைப்பட்ட போலிக் கற்பனைகட்கும்-கருத்துகட்கும் வாசஸ்தலமாகி வனப்பு இழக்கக் கூடியது. மொத்தத்தில் சொல்லப் போனால் இது நம்மிடம் குடிகொண்ட சிந்தனா சக்தியையே சிதைத்து விடுகிறது. அத்தோடு போர்கள், சச்சரவுகள், அரசியல் மோதல்கள், சமுதாயச் சிக்கல்கள் - இவை எல்லாமும் சிந்திக்க விடாமல் நம் மன அமைதியைச் சிதைத்து விடுகின்றன. போர்கள் ஏன்? பொருள் ஆசையால்தான் போராட்டங்கள் தோன்றுகின்றன. இவ்வுடலுக்காகவும் உடற் சேவைக்காகவும் பணம் சம்பாதிக்கப்பட வேண்டியுள்ளது. (Money has to be acquired for the sake and service of the body) இந்த எல்லாக் காரணங்களும் தத்துவத்திற்கு நேரமில்லாமல் தடைபோட்டு விடுகின்றன.

இவ்வுடல் எப்பொழுதும் நம்மை உருக்குலையச் செய்து நம்முடைய விசாரணையிலே கொதிப்பையும் குழப்பத்தையும் உண்டாக்கிக் கொண்டே இருக்கிறது. நம்மை "உண்மையை" உணர விடாமல் ஊடுருவித் தடுக்கிறது. (We are prevented from seeing the TRUTH) இந்த உடலோடு ஆன்மா இணைக்கப் பட்டிருக்கும்போது, அதனோடு ஒன்றுபட்டு ஒன்றாகி விடும்போது, சுத்த அறிவு சற்றும் தோன்றாது. சுத்தமற்றபோது சுத்தத்தை

அனுசுவிடாது. உண்மையான தத்துவஞானி தன்னை உடலிலிருந்து பிரித்து நிற்கவே என்றும் இடையருது முயல முற்படுவனுவான்.

தத்துவம் எங்கே தழைக்கும் ?

போர் பொருளாசையால் வருகிறது என்ருல் பொதுவாக நாம் நம் தேவைகளைக் குறைத்துக் கொண்டால் போரைத் தவிர்க்கலாம் என்பது பிளேட்டோவின் கருத்து. தத்துவ ஞானியை உடல் உழைப்பு செய்யவற்புறுத்தலாகாது என்றும் பிளேட்டோ குறிப்பிடுகிருர். அவன் பிறர் பொருள் உதவியால் பேணப்பட வேண்டும். ஓர் எழ்மையான நாட்டிலே ஏற்றமிகு தத்துவ ஞானிகள் எப்பொழுதும் தோன்ற மாட்டார்கள். ஏதென்ஸ், பெரிக்கில்ஸ் (Periclas) காலத்திலே செல்வங்கொழிக்கும் சிறந்த நாடாக இருந்தது. அப்போதுதான் தத்துவம், கலைகள் எல்லாம் தழைத்து ஓங்கின என்பது குறிப்பிடத் தக்கது. பொதுவாகப் பேசினுல் அறிவுத்துறை நலன்கள் எல்லாம் பொருள்துறைச் சரக்குகளைப் போல அதிக விலைமிக்கது. (Speaking broadly, intellectual goods are just as erpensive as more material commodities)

அறிவு என்பது திரும்ப நினைத்தலே !

பிளேட்டோ, "ஃபீடோ" (Phaedo) என்ற தம் நூலில் பல நுட்பமான செய்திகளைப் படைத்துத் தருகிருர். அவற்றில் ஒன்று அறிவு பற்றியது அறிவு என்பது திரும்ப நினைவதாகும். (Knowledge is reeollcction) என்கிருர். திரும்ப நினைவதென்ருல் ஆன்மா முன்னமே பிறவிகளை அடைந்திருக்க வேண்டும். நம் இப்பிறவி அனுபவத்தில் வாராத சில இயல்புகள் சில எண்ணங்கள்- சில கருத்துக்கள் சில திறமைகள் நம்பால் நயம்பட உதிக்கின்றன. அவை முற்பிறவி அறிவிலிருந்துதான் நம் அடைந்திருக்க முடியும் என்பதில் ஐயமில்லை. சில சாரம் மிக்க தன்மையுடைமையும், அவற்றை நாம் அறிந்துணரும் ஆற்றலும் ஆன்மா அறிவோடு முற்பிறவி கொண்டிருந்தமைக்குத குறிப்பிடத்தக்க அத்தாட்சி ஆகும்.

பிளேட்டோவின் பழம் நினைவுக் கோட்பாடு :

பிளேட்டோவின் ஆன்மாவின் அழியா நிலைக்கோட்பாட்டோடு (Jmmortality of the soul) இணைந்து செல்வது அபாரது பழம் நினைவுக்கோட்பாடு (Doctrine of Reminiscence) ஆகும். ஒரு நுட்ப அறிவுகொண்ட சிறுவன் விஞ்ஞானம் பற்றிச் சில கேள்விகள் கேட்கப்பட்டான். அவன் இன்னும் விஞ்ஞானப் படிப்பையே கற்கத்

தொடங்கவில்லை. ஆனால் அந்த சிறுவன் சீரிய முறையிலே பதில் விடுத்தான். இஃது எப்படி சாத்தியம் ஆகும்? அறிவு என்பது ஆன்மாவால் முன்னிருந்த ஒரு வாழ்க்கையிலே இருந்துகொண்டு வரப்படுகிறது. (Knowledge is brought by the soul from a previous existence) மேலும், கற்பித்தல் என்பது கிடையாது. ஆனால் திரும்ப நினைவது என்பது ஒன்றுதான் (There is no teaching but only recollection) என்கிறார் சாக்ரட்டீஸ்.

ஒரு வினா வரலாம். முற்பிறவியின் எல்லா நினைவுகளையும் இப்பிறவியில் கொண்டுவரமுடியுமா? அது முடியாத ஒன்று என்பது பிளேட்டோவின் விடை. ஒரு விதமான தனிச்சிறப்பு மிக்க அறிவு (Priori) தான் ஒழுங்குபட்டு இப்பிறவியில் நினைக்க வரும். கணிதத் திறம், தர்க்கத்திறம்,பேச்சுத்திறன் போன்றவைதான் பிறவியொடு தொடர்ந்து வருவன. (கணிதமேதை சி. வி. இராமனை உதாரணமாகச் சொல்லலாம்) மற்ற எல்லாப் பழம் நினைவையும் இப்பிறவியில் கொணர இயலாது.

ஆன்மா என்பது நாம் பிறப்பதற்கு முன்பே இருந்தது என்பது பிளேட்டோவின் சித்தாந்தம். (Our souls existed before we were born) காணும் பொருள் யாவும் அழிவுக்கு உட்பட்டன. காணப் படாத பொருள்கள் தெய்விகமானவை. உடல் காணப்படும் ஒன்று, ஆனால் ஆன்மா காணப்படாத ஒன்று. ஆகவே ஆன்மா தெய்விகப் பொருள்கள் வகையில் சேர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். (The body is seen but the soul is unseen; therefore the soul is to be classified in the group of things that are eternal.)

தத்துவ ஞானியின் ஆன்மா உடல் தசையின் உபத்திரவத்தி லிருந்து விடுதலை பெற்ற ஒன்றாகும். இறப்பிற்குப்பின் அது காணப் படாததோர் உலகிற்குச் சென்று ஓடுகிறது. கடவுளரோடு உடனி ருந்து உயர் இன்பத்தைப் பெறுகிறது. உண்மையான தத்துவ ஞானிகள் உடல் தசை இச்சைகளிலிருந்து நீங்கி நிற்கின்றனர். பழம நினைவுக் கோட்பாடு (Theory of Reminiscence) இந்த உன்னத நிலைக்கு அத்தாட்சியாகிறது.

இறுதியிலே பிளேட்டோ கூறுகிறார் ஆன்மாக்கள் இறப்பிற்குப் பின் என்ன நிலைக்குச் செல்கின்றன? நல்ல ஆன்மாக்கள் விண்ணுலகு புகுகின்றன. தீயவை நரகத்தை நாடுகின்றன. இடைப்பட்ட ஆன்மாக்கள் பிறவி எடுத்து மீட்சிக்கு (Purgatory) முயல்கின்றன.

பிளேட்டோவின் பிற சிந்தனைகள் :

பிளேட்டோ டைமீயஸ் (Timaeus) என்ற நூலில் பிரபஞ்சத் தோற்றம் (Cosmogony) பற்றிப் பேசுகிருர். இந்நூல் சீரிய சண்டமாருத பிரசங்கியான சிசேரோவால் (Cicero) கிரேக்க மொழியிலிருந்து லத்தீன் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது. கடவுள் புரிந்ததெல்லாம், முறையற்றுக் குழம்பி நின்றவற்றை ஓர் அமைப்பில் கொணர்ந்ததுதான் (Out of disorder he brought order) எனப் பேசுகிருர் பிளேட்டோ. சூன்யத்திலிருந்து இறைவன் சுந்தரவடிவுகளை அருள இயலாது. இறைவன் செயல் ஏற்கனவே இருந்தவற்றை முறைப்படுத்தி வைத்ததுதான். (Chaos into Cosmos) அவன், புத்தியினை ஆன்மாவில் வைத்தான். உடலில் உயிரைப் புகுத்திஞன். அவ்வளவு தான். பிளேட்டோ எண்வடிவே (number) உலகத்திற்கு விளக்கமாக அமைகிறது என்கிருர். இறைவன் காலத்தை அமைத்தான் (Time) அதற்கு முன் காலம் இல்லை. இறைவன் இரவு பகலை அமைத்தான். நாளை அமைத்தான். வாரம் அமைத்தான். மாதம் அமைத்தான். ஆண்டை அமைத்தான். இறைவன் படைத்தவற்றை நான்கு கூறுகளாகப் பிரிக்கலாம். கடவுளர், பறவைகள், மீன்கள், நிலத்தில் வாழும் பிராணிகள். கடவுள் சில ஆன்மாக்களை மண்ணில் வைத்தான். சிலவற்றை மதியத்தில் வைத்தான். சிலவற்றைக் கிரகங்களிலும் நட்சத்திரங் களிலும் இருக்கச் செய்தான். கடவுளர்களை வேண்டும் உருவங்களை அவர்களே அமைத்துக் கொள்ள ஆற்றலையும் கொடுத்தான் என்கிருர் பேரறிஞர் பிளேட்டோ.

பஞ்ச பூதங்களாகியவை பொருள்கள் அல்ல. அவை பொருள் களின் ஒரு நிலையே ஆகும். (They are not substance; but rather a state of substance.)

இன்னும் பிளேட்டோ பிரபஞ்சத்தோற்றத்தைக் (Cosmogony) கணித சாஸ்திரத்தோடு இணைத்துக் கணித்து விளக்குகிருர். ஆனல் அவை எல்லாம் தற்காலத்திற்கு ஏற்புடையன அல்ல என பெட்ராண்ட் ரஸ்ஸல் (Betrant Russell) அவற்றை ஒதுக்குகிருர்.

பிளேட்டோவின் பிரபஞ்சத்தோற்றம் (Plato's Cosmogony) தத்துவ சாத்திர முக்கியத்துவம் கொண்டது அல்ல என்றும், ஆனல் சரித்திர முக்கியத்துவம் கொண்ட தென்றும் ரஸ்ஸல் மதிப்பீடு செய்கிருர். (As philosophy it is unimportant but histarically influental)

பிளேட்டோ அறிவைப்பற்றியும் (Knowledge) காணுதல் பற்றியும் (Perception) ஒப்பீடு செய்து விளக்குகிறார். அதன் சாரத்தினை மூன்று முடிவுகளில் தருகிறார் பிளேட்டோ.

(1) அறிவு என்பது காணுதலே ஆகும். (Knowledge is perception)

(2) மனிதனேஎல்லாவற்றிற்கும் அளவுகோலாய் அமைகிறான். (Man is the measure of all things)

(3) எல்லாமே ஒரு மாறியோடும் நிலை கொண்டது. (Everything is in a state of flux)

நாம் பிளேட்டோவைப் பற்றி எட்டுக் கட்டுரைகளில் இயன்ற அளவு விளக்கியுள்ளோம். ஆனால் பிளேட்டோவின் எல்லாக் கருத்துக்களும் இக்கட்டுரைத் தொடரில் விளக்க முடியாது. பிளேட்டோ தம் கோட்பாடுகளை 29 நூல்களில் இருத்தி விளக்கிப் பேசியுள்ளார். பல கருத்துக்கள் பிரச்சினைக்கு உரியன. பல விளக்கங்கள் கணித - வானியல் சம்பந்தமானவை. ஆனால் நாம் முக்கியமான பயனுள்ள செய்திகளையே தக்க முறையிலே தந்துள்ளோம். இவர்தம் கோட்பாடுகளைத் திரும்பத் திரும்ப வாசித்தால்தான் மனம் பற்ற இயலும்.

இக்கட்டுரையோடு பிளேட்டோவின் தத்துவம் முடிவெய்து கிறது. பிளேட்டோவைப் போலவே - ஏன்? பிளேட்டோவினும் கூட-சீரிய சிந்தனையாளர் அவர்தம் அருமை சீடர் அரிஸ்டாட்டில் (Aristotle) ஆவார். அவர்தம் தத்துவ போதனை, தருக்க சாத்திரம் ஆகியவை மிக விரிவானவை. அவற்றை அடுத்த கட்டுரையி லிருந்து ஆய்வோமாக!

ஆதார நூல்கள் :

A History of Western Philosophers by Bertrand Russell.
Basic Teachings of Great Philosophers by S. E Frost
100 Great Thinkers by Jay E. Greene
Living Biographies of Great Philosophers by Thomos & Thomos
Philosophy Made Simple by Richard H. Popkin and Avrom Strole
Get to know Philosophy by Hugh Harris.
Student's History of Philosophy by Arthur Kenyon Rogers.

(தொடரும்)

சைவசமயமும் பரிணமக்கொள்கையும்

திரு. சி. முருகேசன், எம். எஸ்சி., எம். பில்.,
புதுக்கோட்டை.

(மலர் 47, இதழ் 6, பக்கம் 29ம் இன் தொடர்ச்சி.)

இந்த முப்பத்தாறு தத்துவங்களையும் மூன்று பெரும் பிரிவாக வகுத்து, அவைகளின் இலக்கணம், தொழில்படும் முறை ஆகிய வற்றை "உண்மை விளக்கம்" என்ற சித்தாந்தநூல் விரிவாக எடுத்துரைக்கிறது. 36 தத்துவங்களில் ஆன்மதத்துவங்கள் 24. ஐம்பூதங்கள், ஐம்பொறிகள், ஐம்புலன்கள், ஐந்து கர்மேந்திரியங் கள், அந்தக்கரணங்களான மனம், சித்தம், புத்தி, அகங்காரம் ஆகியவை ஆன்மதத்துவங்கள். வித்தியாதத்துவங்கள் 7; அவை யாவன: காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், பிரகிருதி மாயை என்பன. சிவதத்துவங்கள் 5. அவை முறையே நாதம், பிந்து, சதாக்கியம், மகேசுவரம், சுத்தவித்தை என்பன. இந்த 36 தத்துவங்களின் சேர்க்கையே உலகும், உலகில் காணப்படும் பருப்பொருள்களும். மாயை வேதாந்திகள் கூறுவதுபோன்று ஒரு பொய்த்தோற்றம் (Illusion) அன்று. அது பதியைப் போலவும், பசுவைப்போலவும் அநாதியான ஒரு உள்பொருள் என்பதே சித்தாந்தம் கொண்ட முடிபு. இறைவன் ஏன் தானகவே உலகைத் தோற்றுவிக்கக் கூடாது என்பது சிலரது வினா. இறைவன் சித்துப் பொருள், உலகு ஒரு சடப்பொருள். சித்துப்பொருளான, பேரறிவுச் சுடரான இறைவனிலிருந்து அறிவற்ற சடப்பொருள் எங்ஙனம் தோன்றமுடியும்? எனவேதான் மாயை என்ற மூலப்பொருளைச் செயல்படவைத்து. ஆன்மாக்களின் மலபரிபாகத்தின் பொருட்டு இறைவன் இவ்வுலகைப்படைக்கிருன் என்று கொள்கைவகுத்தனர் சித்தாந்திகள்.

மாயையிலிருந்து இறைவனின் அருளாற்றலால் பரிணமிக்கும் பிறப்பு வகைகள் நான்கு. அவையாவன:

1. அண்டசம் - (முட்டையிலிருந்து தோன்றுவன) - மீன் தவளை, முதலை, பல்லி, பாம்பு, பறவை போன்றவை.

2. சுவேதசம் - (வியர்வையிலிருந்து தோன்றுவன) விட்டில், பேன் போன்றவை.

(விட்டில், பேன் போன்ற பூச்சி வகைகளும் முட்டையிலிருந்தே வெளிவருகின்றன. இவைகளின் இனப்பெருக்க முறைபற்றிப் பல

நூற்றாண்டுகளுக்கு முன்பு தெளிவாகத் தெரிந்திருக்க சாத்திய மில்லை).

3. உற்பிச்சம் - (வித்து, வேர் முதலியவைகளிலிருந்து மேற் பிளந்து தோன்றுவன) – தாவரங்கள்

4. சராயுசம் - (கருப்பையில் தோன்றுவன) ஏனைய விலங்கு களும், மனிதர்களும், தேவர்களும்.

இப்பிறப்பு வகைகளை வினைக்கு ஈடாக இறைவன் மாயையைச் செயல்பட வைத்து தோற்றுவிக்கிருன். இந்த நான்கு வகைப் பிறப்பில் தாவரங்கள் பத்தொன்பது நூருயிரம் பிறப்பு வேறு பாடுடையன. ஊர்வன பதினைந்து நூருயிரம் பிறப்பு வேறு பாடுடையன. நீரில் வாழ்வன, பறவைகள், நாற்கால் விலங்குகள் ஆகிய ஒவ்வொன்றும் பத்து நூருயிரம் பிறப்பு வேறுபாடுடையது. தேவர்கள் பிறப்புப் பதினெரு நூருயிரம் வேறுபாடுடையது. மொத்தமாகப் பார்க்கும் பொழுது பிறப்பு வகைகள் எண்பத்து நான்கு நூருயிரம் ஆகும்.

"தோற்றியிடும் அண்டங்கள் சுவேதசங்கள் பாரில்
துதைந்துவரும் உற்பிச்சம் சராயுசங்கள் காணின்
ஊற்றமிகு தாவரங்கள் பத்தொன்பது என்றும்
ஊர்வன பதினைந்து, அமரர் பதினென்ருெடு உலவா
மால்தரு நீர்உறைவன, நல்பறவைகள், நால்காலி
மன்னியிடும் பப்பத்து, மானுடன் ஒன்பதுமாக
ஒற்றிஒரு தொகை ஆக இயம்புவர்கள் யோனி
எண்பத்து நான்குநூ ருயிரம்என்று எடுத்தே"

என்ற சிவப்பிரகாச நூற்பா பிறப்பு வேறுபாடுகளை விரிவாக விளக்குகிறது.

"உரைசேரும் எண்பத்து நான்கு நூருயிரம் யோனி பேதம்"– என திருஞானசம்பந்தரும் கூறுவது குறிப்பிடத்தக்கது.

இறைவனது திருவருளால் இவ்வாருன பலபிறவிகளில் பிறந்து, இறந்து, நல்வினை என்றும், தீவினை என்றும் இருவினை களைச் செய்து அவைகளால் வரும் இன்பத்துன்பங்களைத் துய்ப்பது பசுவான ஆன்மா. பரிணுமக்கொள்கையை இவ்வளவு நேர்த்தி யாகவும், தெளிவாகவும் கூறும் சமயம் சைவத்தைப்போல் உலகில் ஒன்று உளதா என்பது ஐயமே, சைவம் காட்டும் பரிணுமம். இறைவனின் அருளால் நடைபெறும் பரிணுமம், எனவே சைவம் விஞ்ஞான அடிப்படையில் எழுந்த ஓர் சமயம் என்பதை நாம் நன்குணரவேண்டும்.

தோண்டி எடுக்கப்பட்ட அபூர்வமான சிவலிங்கம்

திரு. என். ராமகிருஷ்ணு

திரு. இராதாகிருஷ்ண ரெட்டியார் என்பவர் திமிரி என்னும் கிராமத்தில் வசிக்கும் அரிசி வியாபாரி. அவர் ஒரு ஐயப்ப பக்தர். ஏழு, எட்டு ஆண்டுக் காலமாகச் சபரிமலே சென்று வருகின்ருர். திமிரி ஸ்ரீ ஐயப்பா நற்பணி மன்றம் ஏற்படுத்தியுள்ளார்.

திமிரி என்னும் கிராமம் வடஆற்காடு மாவட்டத்தில் உள்ளது. சரித்திரப் பிரசித்தி பெற்றது. ராணிப்பேட்டை ஆற்காட்டிலிருந்து 6 கிலோமீட்டர் தெலேவில் உள்ளது. காட்பாடி ரயில் நிலேயத்திலிருந்தும் செல்லலாம். சென்னேயிலிருந்து 3 மணி பிரயாணம் செய்யவேண்டும். இந்த கிராமத்தில் சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் கோவில்கள் உள்ளன.

ஒருசமயம் திரு. ராமகிருஷ்ண ரெட்டியார் தர்மசாஸ்தாவுக்குக் கோவில்கட்ட நற்பணி மன்றத்தின் சார்பில், திமிரியிலுள்ள விஷ்ணு கோவிலுக்குப் பக்கலில் ஒரு நிலம் வாங்கும்படி கேட்டுக் கொள்ளப் பட்டார். உடனே நிலம் வாங்கிச் சுற்றுச் சுவர் கட்டினுர்கள். ஆனுல் எதிர் பார்த்த அளவில் கோவில் கட்டும் வேலே துரிதமாக நடை பெறவில்லே. தடைப்பட்டுக் கொண்டே வந்தது. இதற்கு என்ன காரணமாக இருக்கும் என்று ரெட்டியார் தீவிரமாகச் சிந்தித்தார். தன்னுல் கோவில் கட்ட முடியவில்லே என்று ஐயப்பன் அடிகளேயே சரணடைந்தார். ஆண்டவன் அருளலானுர். ரெட்டியாரைப் பண்டிதர் ஜெ. ஹரி என்பவரிடம் செல்லும்படி பணித்தார். அவர் ஒரு சிற்பி. வேலூரில் வசிக்கின்ருர். அவரிடம் பலவிதமான ஒலேச் சுவடிகள் இருக்கின்றன. இவை சித்தர்களால் எழுதப்பட்டவை. தமிழில் உள்ளவை. அவரிடம் "பிரபஞ்சகாண்டம்" என்ற சுவடி இருந்தது. கந்தரால் (முருகன்) அருளிச் செய்தது என்று கூறப் படுகின்றது.

கல்வெட்டுகளிலிருந்து அத்திப்பாடம் என்ற மலேநாட்டிலிருந்து தொகுக்கப்பட்டது. அத்திப்பாடம் தென்காசி திருக்குற்ருலம் அருகில் உள்ளது. தொகுக்கப்பட்டகாலம் கி.பி. 1317. 3300 ஆண்டு களுக்கு முன் அருளப்பட்டதாம். 18 சித்தர்களில் ஒருவரான

தேரையார் என்பவரால் எழுதப்பட்டதாம். அகத்தியர் தன்னுடைய மாணவர் புலத்தியருக்கு உபதேசம் செய்த முறையில் அமைந்துள்ளது. மேலும் ரெட்டியாருடையஜாதகமும் அந்த ஓலைச்சுவடியில் குறிப்பிடப்பட்டிருந்ததாம்.

ரெட்டியார் தன் ஜாதகத்தைப் பண்டித ஜெ. ஹரியிடம் கொடுத்தார். பண்டிதர் கணக்குப்போட்டுக் கோயில் கட்டத் தாமதமாவதற்குக் காரணம் என்ன என்று கண்டுபிடித்தார். 'தர்மசாஸ்தாவின் தந்தையாராகிய ஈசுவரனை மறந்து, சாஸ்தாவுக்கு கோவில் கட்ட எண்ணலாமா? அவருடைய திருஉருவம் ஒரு வறண்ட குளத்தில் புதைந்து கிடப்பதாகத் தெரிய வந்தது. முதலில் அந்த லிங்கத்தை வெளியே எடுங்கள். எல்லாம் சரியாகி விடும்' என்று கூறினர்.

படிக்கப் படிக்க அபூர்வமான செய்திகள் கிடைத்தன. சரித்திர சம்பந்தமானவை அவை. விஜயநகரசாம்ராஜ்ய காலத்தில் அதை ஏற்படுத்தியவர் ஸ்ரீவித்யாரண்யர், விஜய நகர அரசர் அக்காலத்தில் எல்லாவிதமான துன்பங்களையும் போக்கும் படியான சிவலிங்கம் ஒன்றைச் செய்யும்படி பணித்தார். இச்சிவலிங்கம் மக்களைப் பிணி, பசி, பட்டினி முதலியவற்றிலிருந்து காப்பாற்றும் தன்மை உள்ளதாக இருக்கவேண்டும். அவர் அவையில் இருந்த ஒரு பண்டிதரிடம் இப்பணி ஒப்படைக்கப்பட்டது. இந்த இலிங்கத்தை செய்ய 12 ஆண்டுகள் பிடித்தன. கி.பி. 1368 - 1379.

ஆகம சித்தசில்ப சாத்திரங்களில் கூறியபடிலிங்கம் 7 அங்குலம் உயரம் கொண்டதாக அமைந்தது! இதற்குத் தன் வந்திரி முறை என்றுபெயராம். பஞ்சபாஷாணங்கள் கொண்டு செய்யப்பட்டதாம். முக்கியமான பாஷாணத்திற்குப் பெயர் சந்திரபாஷாணம் என்பது பெயர். சிவலிங்கத்திற்குச் சோமனத ஈசுவரன் என்ற பெயர் கொடுக்கப்பட்டது. அப்போது வித்யாரண்ய சுவாமிகள் சிருங்கேரி மடாதிபதியாக இருந்தார். பின்பு இந்த இலிங்கம் ஆகம விதிப்படி, பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்த இடத்திற்குத் "திமிரி ஈசுவரம்" எனப் பெயரிடப்பட்டது. விஜய நகர சாம்ராஜ்யம் இஸ்லாமியர்களால் அழிக்கப்பட்டபோது அரசன் சிவலிங்கத்தைக் குளத்தில் புதைத்து விட்டான். 32அடி ஆழத்தில் இலிங்கம் கெடாமலிருக்க, அதைத் தேன் மெழுகினல் மெழுகி மற்றும் பல ரசாயன பொருட்களைச் சேர்த்து முக்கோண வடிவத்தில் ஆமை ஓடுபோல் செய்து புதைத்து விட்டனர். இந்த இலிங்கம் நீரின் உள்ளேயே இருக்கும்படி செய்யப்பட்டது. குளத்து நீரை உபயோகித்தவர் பலவிதமான நோய்களிலிருந்து குணம் பெற்றனர்கள். ஆஸ்துமா, குடற்புரை, பக்கவாதம், பைத்தியம் முதலிய நோய்கள் குணமாயின.

இந்தச் சிவலிங்கத்தை கண்டெடுத்து ரெட்டியார் வாங்கிய இடத்தில் பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்று தெரிய வந்தது. சிவன்கோயில் கட்டிய பின்புதான், தர்ம சாஸ்தா கோவில் கட்ட முடியும் என்றும் தெரிய வந்தது.

இந்த இலிங்கத்தைக் கண்டு பிடித்து, பிறகு அதை எப்படிக் கையாள வேண்டும், என்று கூறப்பட்டது. பாஷாணம் ஆனதால் கையால் தொடமுடியாது. 1985 மார்ச் மாதம் சிவலிங்கத்தைக் கண்டுபிடிக்கும்பணி துவக்கப்பட்டது. ரெட்டியார் குற்றாலமலைக்குச் செல்லும்படி பணிக்கப்பட்டார். அங்கு, சண்பகா தேவி கோவில் உள்ளது. பக்கலில் சண்பக அருவி உளது. அங்கு ஒரு எறும்புப் புற்று உள்ளது. அதன் எதிரில் உட்காரவேண்டும். "உனக்கு ஒரு பழமும் மணியும் கிடைக்கும்; அதை எடுத்து மணியை வைத்து, வெள்ளி மோதிரம் ஒன்று செய்து, உன் வலது கையில் போட்டுக் கொள். பின்பு இலிங்கத்தைத் தொட்டால் ஆபத்தில்லை".

"இதற்காக நீ க்ஷேத்திராடணம் செய்ய வேண்டும். பங்குனி – சித்திரை மாதம் பௌர்ணமி அன்று அங்கு இருக்க வேண்டும்"

ரெட்டியார் இரண்டு நண்பர்களுடனும் பண்டிதருடனும் சென்றார். முதல் தடவை ஒன்றும் தடயம் கிடைக்கவில்லை. அடுத்த மாதம் மீண்டும் சென்றார்கள். பூஜை அபிஷேகம் முடித்துப் புற்றின் எதிரில் அமர்ந்தார்கள். எறும்புப் புற்றில் பாம்புகள் தானே வசிக்கும். என்ன செய்வதென்று யோசனை செய்தார்கள். அம்பாளிடமிருந்து உத்திரவு எதிர்பார்த்து இருக்கையில் திடீர் என்று கோடை மழை அரை மணி நேரம் பெய்தது. கோயிலில் ஒண்டிக் கொண்டார்கள். இருட்டி விட்டது. எல்லோரும் சென்று விட்டார்கள். இவர்கள் நால்வரும் பழத்தையும், மணியையும் எதிர்பார்த்து இருந்தார்கள். புற்றுக்குள் கைவிடவோ பயம்! பாம்பு இருந்தால்?

ஆனால் எதிர்பார்த்த பலன் கிடைத்தது. மழை நீரினல் புற்று மண் கரைந்துவிட்டது. ரெட்டியாருக்கு ஒரு வட்ட வடிவமான பொருள் தென்பட்டது. பந்துபோல் இருந்தது. என்ன பொருள் என்று தெரியவில்லை. ரெட்டியார் அதைக்கோவிலுக்கு எடுத்துச் சென்றார். இரண்டாகப் பிளந்தார் உள்ளே இரண்டு சிறுகற்கள் (கடுகளவு) இருந்தன. மற்றும் ஒருஅழகான நீண்டசதுரவடிவமான கல்தென்பட்டது. இவைகள் கிடைத்தவுடன் இலிங்கத்தைத் தேட முற்பட்டனர்.

செய்தி பக்கலில் உள்ள கிராமங்களுக்குப்பரவியது. ரெட்டியார் எல்லோரையும் கூட்டிப் பொதுக் கூட்டம் போட்டார். எல்லா

வற்றையும் விளக்கினர். தன் ஜாதகத்தில் கூறியுள்ளதைச் சுட்டிக் காட்டினர். எல்லோரும் கல்வெட்டிலும் சுவடியிலும் கூறப்பட்டுள்ளதை ஆமோதித்தனர். 22—5—85 வேலை துவங்கியது. காடுகளை அழித்து முட்செடிகளை வெட்டி 32 அடி ஆழம் தோண்டினர். 14—6—85 இல் அந்த முக்கோணப் பெட்டகம் கண்டுபிடிக்கப் பட்டது.

உடனே குளக்கரையில் கொட்டகைப்போட்டு இலிங்கத்தை வைத்து அபிஷேக ஆராதனைகள் நடத்தினர். 40 நாள் ஹோமம் நடந்தது. அபிஷேக தீர்த்தம் நோயாளிகளுக்கு வழங்கப்பட்டது. எல்லாப் பூசைகளும் முடிந்தபின் சிருங்கேரிமடம் சங்கராசாரியார் சுவாமிகள் அவர்களின் அருளாசியின் வண்ணம் இந்த லிங்கம் தற்போது ஒரு கண்ணாடி பாத்திரத்தில் வைக்கப்பட்டுள்ளது. எப்போதும் நீரில் மூழ்கி உள்ளது (பாஷாண லிங்கம் ஆதலால்)

தற்போது ஒரு கோவில்கட்ட ஏற்பாடாகி வருகின்றது. இந்த லிங்கம் பற்றிய விளக்கம் முதலியன 13-14 நோட்டுகளில் 300 பக்கங்களில் எழுதப்பட்டுள்ளது.

ஆங்கிலத்தில் கட்டுரை எழுதியவர் : யோக சிரோமணி சி. சுந்தரவடிவேலு.

பத்திரிகை: தபோவனபிரசாத் (ஆங்கிலம்) பிப்ரவரி 1987.

நன்றி.

கவிதைக் கடிதம் :

பனசை முருகு. சுவாமிநாதன் — திருப்பனந்தாள்,
எம். ஏ, பி, எட்., எம். ஃபில்.
உறுப்பினர், ஆசிரியர் குழு, — 8—6—88.
" ஸ்ரீ குமரகுருபரர் " திங்களிதழ்.

தருமைவரும் அருள்முனிவர் நல்கும் வாக்குத்
தண்தமிழின் சுவையோடு இன்பம் ஆக்கும்
அருமைமிகும் அபிராமி அந்தா தியும்
அதனோடும் ' அருள்வாக்கும் ' அழகு செய்யும்
ஒருமைநெறி வைத்துணர்ந்த ஞானசம் பந்தர்
ஒப்பில்லாத் திருநாமம் பெற்ற ஏட்டுப்
பெருமைதனைச் சொலவிழைந்தேன் பின்னை நாவே
பெறவில்லையே வார்த்தைதமை; பெருமா னேஏன்?

சாக்கிய நாயனார்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம்.ஏ.,பி.எட்.,

[தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் 1—5—1988 ஆங்கிலமாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தையொட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

மேமாதம் முதல்நாள்! தொழிலாளர் தினம்! உழைத்துப் பிழைக்க, அறிவுறுத்தும் உன்னதநாள்!

காலை 9-30 மணிக்குத் தருமைத் திருமடம் நோக்கிச்சென்றேன். ஸ்ரீ சொக்கநாதர் வழிபாடு நிகழ்ந்து கொண்டிருந்தது. பக்தர்கள் ஸ்ரீ சொக்கநாதர்பூசை மடத்தின் தொட்டிக்கட்டு என்ற முற்றப் பகுதியில் நின்று வழிபட்டுக் கொண்டிருந்தனர். பூசை நிறைகிற நேரம்; தாள ஓசையும் நாதசுர இசையொலியும் பரவசப்படுத்தின; தீபஆராதனை நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ குருமணிகள் பக்தர்களுக்குத் திருநீற்றுப்பிரசாதம் வழங்கினார்கள். 'அரகர' ஒலி முழங்கத் திருமடத்துப் பண்டாரக் கட்டிற்கு எழுந்தருளினார்கள்.

அங்கே திருமுறைப்பாராயணம் செய்தருளினார்கள். காலை மணி 10-00. அன்பர்கள் பண்டாரக்கட்டினுள் நுழைத்தனர். குருமணிகள் சித்திராசனத்தில் அமர அருளுபதேசக் கூட்டம் முறையாக- வழக்கம்போல் தொடங்கிற்று.

குருமணிகள் அருளுபதேசத் தொடக்கத்தில் மாதச்சிறப்புத் திருநாட்களைக் குறிப்பிட்டு அவற்றைப் பற்றிச் சில விளக்கங்களை அருளுவது வழக்கம். அம்முறையில் தொழிலாளர் தினம், சித்திரா பௌர்ணமி, சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் அபிஷேகம் முதலிய நாட்கள் பற்றிச் சில குறிப்புக்களை வழங்கினார்கள்.

திருத்தொண்டர்புராணத்தில் - "வார்கொண்ட வனமுலையாள் உமையொருபங்கன்கழலே மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கும் அடியேன்" என்று சுந்தரர் சுட்டியருளிய - சாக்கியநாய நாயனார் புராணம் அன்றைய சிந்தனையாக அமைந்தது.

சாக்கியர் - புத்தசமயத்தினர். இது புறப்புறச் சமயம். அருணந்தி சிவாசாரியர் புறப்புறம், புறம், அகப்புறம், அகம் என அறுவகைச்சமயங்களை நாற்கூறுபடுத்தி விளக்கினர். வேத ஆகமங்களைச் சிறிதும் ஏற்றுக் கொள்ளாதவை புறப்புறச் சமயங்கள். வேதங்களை ஏற்றுக் கொண்டு சிவாகமங்களை ஏற்காதவை புறச் சமயங்கள். வேத ஆகமங்களைப் பொதுவாக ஏற்றுப் பாசுபதம் முதலிய நூல்களைச் சிறப்பு எனக்கொள்பவை அகப்புறச் சமயங்கள். வீடுபேறு என்ற நிலையில் சைவ சித்தாந்தக் கொள்கையினின்றும் மாறுபடுவன அகச்சமயங்கள். இவ்வகைப்பட்டன, நாற்கூற்று அறுவகைச்சமயங்கள். புறப்புறச்சமயங்கள் ஆறனுள் நால்வகைப் பௌத்தம் கூறப்படும். பௌத்தர் சாக்கியர்எனப்பட்டனர். சாக்கிய நாயனர் புத்தமதத்தைத் தழுவிநின்று சைவம் சார்ந்த அருளாளர்.

தொண்டைநாட்டில் காஞ்சியை அடுத்துள்ள திருச்சாத்தமங்கை என்ற ஊரில் வேளாளர் குலத்தில் அவதாரம் செய்தவர். சேக்கிழார் இவரை பற்றிக் குறிப்பிடும் போது,

" அறுசமயத் தலைவராய் நின்றவருக்கு அன்பராய்
மறுசமயச் சாக்கியர்தம் வடிவினால் வரும்தொண்டர் "

என அறிமுகப் படுத்தினர்.

சேக்கிழார் சிவபெருமானை 'அறு சமயத் தலைவர்' எனக் குறித்தார். அறுவகைச் சமயங்களைப் புறக்கணிக்காமல், அவற்றின் தத்துவம் கண்டு தெளிந்து, அவற்றின் மேலானது சைவசித்தாந்த நெறி என அருணந்திசிவம் பிற்காலத்தில் (கி. பி. 13 இல்) இதனை ஒட்டி விளக்கிய சீர்மையைத் தெளிவுபட அருளினர்கள்.

அறுசமயத் தலைவராம் சிவபெருமான் நெறியைச் சாக்கிய நாயனர் நன்கு ஆராய்ந்து தெளிந்து பின்பே கடைப்பிடித்து ஒழுகினர். "நீளாது பிறந்து இறக்கும் நிலை ஒழிவேன்" என்ற கருத்துடைய சாக்கியர், இந்நிலையை எய்தத் திருச்சாத்தமங்கைக்கு அடுத்துள்ள காஞ்சிபுரம் எய்தினர்; பௌத்தர்களை அணுகினர்; அவர்கள் தம் நூல்களைக் கற்றார்; இப்படி நன்கு கற்று அறிந்தபின் பௌத்தமும் பிறசமயங்களும் 'பிறந்து இறக்கும் நிலையை ஒழிக்க மாட்டா' என உணர்ந்தார். சிவபெருமான் அருள் அவர்க்கு எய்திற்று.

" செய்வினையும் செய்வானும் அதன்பயனும் கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள் "

என உணர்ந்தார். 'இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக்கு இல்லை' எ.. ் கண்டார்.

குருமணிகள் இப்பகுதியைச் சுட்டிக்காட்டிச் சைவநெறி விளக்கம் தந்தருளினர்கள். உயிர்கள் செய்த வினையின் பயனை அவ்வவ் உயிர்கட்கு ஊட்டுபவன் இறைவன் என்பது சைவநெறி. வினைகள் சடம். ஆகையால் அவை தாமே செய்தவனைச் சென்று அடையாமாட்டா. ஆதலால் ஊட்டுவான் ஒருவன் உளனுதல் வேண்டும் என்ற கொள்கையின் வலிமையைச் சிறப்பாகச் சுட்டினர்கள். இக்கருத்தை உமாபதிசிவாசாரியர், திருவருட்பயன் என்ற நூலில்,

"செய்வானும் செய்வினையும் சேர்பயனும் சேர்ப்பவனும்
உய்வான் உளன்என்று உணர்"

என அருளிச் செய்துள்ளமையை இதனோடு ஒப்பிட்டருளித் திருமுறைகள் சாத்திரங்கட்குத் துணையாதலைக் குறிப்பிட்டமைசிறிய ஆய்வுக்கருத்தாக அமைந்தது.

சிவநெறியுணர்ந்த சாக்கியர் சைவமாம் சமயம் சாரும் ஊழ் பெற்றார். தாம் அணிந்திருந்த - சாக்கியருக்கு உரிய துவராடையை நீக்காமல் சிவனடியார் ஆனர்.

"எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன்தாள் மறவாமை பொருள்."

என்று கருதினர். நீள்நாகம் அணிந்த சிவபிரானை அருவாக, உருவாக, அருவுருவாகக்கண்டு, கொண்டு வழிபடலாம். சாக்கியர் அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கத் திருமேனியை வழிபடக் கருதினர். நாள்தோறும் உணவு உண்ணும் முன் சிவலிங்க வழிபாடு ஆற்றினர். இவர் ஆற்றிய வழிபாடு வியக்கத்தக்கது!

ஒருநாள் இவ்வடியார் ஒரு வெளியில் சிவலிங்கத்தைக் கண்டார்; மனம் மகிழ்ந்தார். அருகில கிடந்த ஒரு கல்லை எடுத்தார். கல்லை மலராகக் கருதினர். 'தாம் செய்யும் செயல் இனைது' என அறியாமலே அன்போடு சிவலிங்கத்தின் மேல் அர்ச்சிப்பது போல் எறிந்தார். வன்மைபுரிவதாகிய இச்செயலைப் பெருமான் ஏற்றார். குழந்தைகள் 'அன்பினால் இகழ்து போன்ற செயல்களைச் செய்தாலும் பெற்றோர் மகிழ்வது போல' மகிழ்ந்தார். நாள்தோறும் அன்பினால் பெருமான்மேல் மறவாது கல்லெறிந்து (சிவபூசைசெய்து வழிபட்டபின்னரே உணவு உண்பதை நியமமாகக் கொண்டார்.

சேக்கிழார் இவ் அன்பின் செய்கையைக் கண்ணப்பர் செய்த அன்பின் செய்கையோடு ஒப்பிட்டமையைக் குருமணிகள் திருத்தொண்டர் புராணப்பாடற் சான்று காட்டி விளக்கினர்கள்,

"கல்லாலே எறிந்ததுவும் அன்பான படிகாணில்
வில்வேடர் செருப்படியும் திருமுடியில் மேவிற்ருல்;
நல்லார்மற் றவர்செய்கை அன்பாலே நயந்ததனை
அல்லாதார் கல்லென்பர்; அரனுர்க்கஃது அலர்ரமல்"

என்பது சேக்கிழார் திருவாக்கு. அன்புடன் செய்யப்படும் வழிபாடு அன்புநெறி என்றும் இறைவனை முந்தையோர் அருளிய முறைப்படி வழிபடுதல் விதி வழி என்றும் கூறப்படும். சாக்கியர் நெறி அன்பு நெறி; மெய்யன்புடன் வழிபாடு ஆற்றுவது இறைவனுக்கு உவப்பாவதுவே என விளக்கினுர்கள்.

சாக்கியர், ஒருநாள் அயர்வோடு உணவு கொள்ளச் சென்ருர், சென்று அமர்ந்தவர் உடன் எழுந்தார், "எம்பெருமான் தனை எறியாது யான் அயர்ந்தேன்" என்ருர். உடன் விரைந்து ஓடினுர்; ஒருகல்லை எடுத்தார்; சிவலிங்கத்தின் முன் சார்ந்தார்; அர்ச்சிப்பது போல எறிந்தார். பெருமான் உமையுடன் விசும்பில் காட்சி தந்தருளினுர். சாக்கியர் விழுந்து வணங்கினுர். பெருமான் அருள் நோக்கம் செய்தார். சிவலோகத்தில் பழ அடியார் ஆகும் பான்மை அருளினுர் – இங்ஙனம் வரலாற்றை அருளினுர்கள்.

சாக்கியர் சைவரான நிலைபற்றி ஓர் ஒப்பீட்டு விளக்கம் அருளினுர்கள் திருநாவுக்கரசர் சைவ சமயத்திலிருந்து சமணர் சமயம் புக்க நிலையைச் சேக்கிழார்,

"சமயங்கள் ஆனவற்றின்
நல்லாறு தெரிந்துணர நம்பர் அருளாமையினுல்
கொல்லாமை மறைந்துறையும் அமண் சமயம் குறுகுவார்"

எனக் குறித்தார். புத்த சமயம் சார்ந்து ஒழுகிய சாக்கியர் சைவம் சார்ந்து அருள் பெற்றமை பற்றிக் குறிக்கும் போது,

"உய்வகையால் பொருள் சிவன் என்று
அருளாலே உணர்ந்தறிந்தார்"

எனப் பாடியருளினுர். இறைவன் அருளாமையால் புறச்சமயம் சார்தலும், இறைவன் அருளால் சைவம் சார்தலும் ஆகும் எனத் தக்க இடங்களில் சேக்கிழார் குறிப்பிட்டு இறையருளாலேயே அனைத்தும் நிகழ்வன என்ற தத்துவத்தை விளக்கினுர். இங்ஙனம் சீரிய ஒப்பீடு செய்த குருமணிகள் ஆய்வுரை மனம் கவர்ந்து மகிழ்வித்தது.

'எல்லாம் உடைய ஈசன்' எனத் தொடங்கும் சாக்கிய நாயனார் புராணத்திலமைந்த ஏழாம் பாடல் தொடரைக் குறிப்பிட்டு, 'இறைவன் ஆண்டான்; உயிர்கள் அடிமை; உயிரில் பொருள்கள் உடைமை;' என விளக்கம் அருளியமை 'அடிமை, உடைமை' என்னும் சொற்களின் பொருள்களைத் தெளிவாய் உணர்ந்து கொள்ளப் பெருந்துணையாய் நின்று சிறந்தது.

இங்ஙனம் பாடல் விளக்கம், தத்துவ ஒப்பீடு, மேற்கோள்கள், உலகியல் எடுத்துக்காட்டுக்கள் அமைய அன்றைய அருளுபதேசம் சிறப்பாக நிறைவெய்தியது. ஆதீனப் பண்டாரக்கட்டுக்கு வெளியே அலுவலக இளைஞர்கள் பழச்சாறு நல்கி மகிழ்வித்தனர். இனிய உபசரிப்பு! சாறு பருகினோம்! இனிய நினைவுகளோடு இல்லம் ஏகினோம்!

சமய நெறிபுகட்டிச் சான்றுகளால் அவைவிளக்கி
நமையெல்லாம் ஆண்டுகொளும் நற்குருவின் தாள்தொழுவோம்!

வாழ்க குருமணிகள்!

ஸ்ரீலஸ்ரீ குருமணியின் அருள்மொழி

அனுபவ உண்மை

'கண்ணால் யானும் கண்டேன் காண்க' என்பது எதுபோல் என்றால் சென்னையை முழுதும் உணர்ந்தவரிடம் முகப்பேர் முதலித் தெரு எங்குள்ளது என்று கேட்க, அவர் தெரியவில்லை என்றால் அவருக்குச் சென்னையே தெரியாது என்பது பொருள் அல்ல. கடலைக் கண்டவர் உண்டு; அதில் குளித்தவர் உண்டு; கடல் எப்படி இருக்கும் என்றால் ஓரளவு அனுபவத்தால்தான் கூறமுடியும். முற்றிலும் தெரியுமா? கடலின் நீளம், அகலம், ஆழம், விளை பொருள்கள் என்றுகேட்டால் கூறமுடியாது. அதுபோலக் கடவுளைத் தெரியும், அனுபவித்துள்ளேன், என்பவரிடம் 'எப்படி இருப்பார்' என்று கேட்க முடியாது ஆண்டவனைத் தன் உணர்வினால் அனுபவித்தவர்கள், கண்டவர்கள், ஞானிகளும் சித்தர்களும் ஆவர். இந்தக் கண்ணால் அல்ல, ஞானக் கண்ணால் கண்டனர். ஞானமே கண்ணுக்குத் தெரியாதபோது ஞானமாக விளங்குகின்ற இறைவனை எவ்வாறு ஊனக் கண்ணால் (ஊன் - தசை) காண்பது?

— திருவருட் செய்தி (இரண்டாம் தொகுதி)

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளில் சிவதலச்சிறப்பு வழிபாடுகள் நிகழ்ந்து வருகின்றன. விபவ - வைகாசி - ஆயில்யநாள் 22—5—88 ஞாயிறன்று நவக்கிரகங்களில் நடுநாயகமாக விளங்கும் சூரியன் கோயில் கொண்டுள்ள சூரியனார்கோயிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. 'சூரியனார்கோயில் தலச் சிறப்புக்கள்' என்ற நூல் வெளியிடப்பெற்றது. வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., தலச்சிறப்புக்களை விளக்கி உரையாற்றினார். அன்பர்கள் வழிபட்டுப் பயன்பெற்றனர்.

தருமை ஆதீனம்
ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில் பெருவிழா

தருமை ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஜீவசமாதி எய்திய திருக்கோயிலாகிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் ஆலயத்தில் 27—5—88 அன்று தொடங்கிப் பெருவிழா நிகழ்வுற்றது. நாள்தோறும் பஞ்சமூர்த்திகள் திருவீதியுலாக்காட்சி நிகழ்ந்தது. திருவீதியுலாவின்போது ஆதீன வேத சிவாகம பாடசாலை, தேவார பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் ஆதீன தேவஸ்தான ஓதுவாமூர்த்திகளும் வேதபாராயணமும் திருமுறைப்பாராயணமும் நிகழ்த்தினார்கள். அன்பர் பலர் தரிசித்து இன்புற்றனர்.

குருபூஜைப் பெருவிழா :

தருமை ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜைப்பெருவிழா 5—6—88 ஞாயிற்றுக்கிழமையன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. காலை தருமை ஆதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் ஸ்ரீ ஆனந்தபரவசர் பூங்காவிலுள்ள குருமூர்த்தங்களை வழிபட்டு ஆன்மார்த்த மூர்த்தி ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனை செய்தார்கள். நண்பகல் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் விசேஷ அபிஷேகங்களும் பஞ்சமுகார்ச்சனை, நவசக்தி அர்ச்சனை ஆகியவையும் சிறப்பாகநடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றி, வழிபாட்டிற்கு வந்திருந்த அன்பர்கட்கு அருட்பிரசாதம் வழங்கினார்கள்.

"திருமந்திரம்" (ஏழு, எட்டு, ஒன்பது தந்திரங்கள்) என்ற நூல் பூசையில் வைக்கப்பெற்றது. ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில் வழிபாடு நிறைவெய்தியபின் நண்பகல் மாகேசுவரபூஜை நிகழ்வுற்றது. குருபூஜைவிழாவில் அன்பர்கள் பலரும் கலந்துகொண்டு வழிபட்டுப் பயனுற்றனர்.

குருமூர்த்த தரிசனம் :

குருபூஜைத் திருநாள் 5—6—88 அன்று ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தில் மாலை 6-30 மணியளவில் நாதசுர இன்னிசை முழக்கத்துடன், திருமஞ்சன வீதியில் அமைந்திருக்கும் குருமூர்த்தங்களைத் தரிசித்து வழிபாடாற்ற எழுந்தருளினார்கள். குருமூர்த்த வழிபாட்டின்போது ஒவ்வொரு குருமூர்த்தத்திலும் அருள் வரலாறு கூறப்பெற்றது. குருமூர்த்த வழிபாட்டிற்குப்பின் ஸ்ரீ தருமபுரீசுவரர் ஸ்ரீ அஷ்டாதசபுஜமகாலட்சுமி துர்க்காதேவி, ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில்களில் வருபாடாற்றித் திருமடத்திற்கு எழுந்தருளினார்கள். ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்குக் குருபூஜைத்திருநாளில் நிகழ்த்தப்பெறுகின்ற சிறப்பு வழிபாடுகள் திருமெய்ஞ்ஞான நிவேதனத்துடன் நிகழ்த்தப் பெற்றன. வழிபாட்டிற்குப் பின் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திருக்கொலு வீற்றிருந்து அருட்காட்சி வழங்கியருளினார்கள். வழிபாட்டின்போது ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம், திருச்சிராப்பள்ளி திரு. ஏ. கே. சி. நடராசனுக்கு, பொன்னாடை போர்த்தித் 'தருமை ஆதீன இசைப்புலவர்' என்ற பட்டம் பொறித்த பொற்பதக்கம் வழங்கி ஆசியருளினார்கள். ஆதீனக் திருக்கூட்டத்து அடியவர்களும் அறிஞர் பெருமக்களும் அன்பர்களும் தரிசித்து அருட்பிரசாதம் பெற்றுய்ந்தனர்.

பட்டினப்பிரவேசம் :

6—6—88 திங்கட்கிழமை பட்டினப்பிரவேசத் திருநாள். அன்று காலை 7 மணி அளவில் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் சிவ பூசகர்களின் சிவபூசை நடைபெற்றது. காலை 10 மணி அளவில் ஸ்ரீ சொக்கநாதப்பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்வுற்றன. ஸ்ரீ சொக்கநாதர் வழிபாட்டின் நிறைவில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் டாக்டர் திரு. சீர்காழி கோ. சிவசிதம்பரத்திற்கு இண்டைசூட்டிப் பொன்னாடை போர்த்தி, 'தருமை ஆதீன இசைப்புலவர்' என்ற பட்டம் பொறித்த பொற்பதக்கம் வழங்கி ஆசியருளினார்கள். நண்பகல் மாகேசுவரபூஜை நடைபெற்றது. இரவு தருமை ஆதீன இசைப்புலவர், டாக்டர் திரு. சீகாழி கோ. சிவசிதம்பரம் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

பின்னர் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் சிவிகையை வலம் வந்து வழிபட்டு எழுந்தருளித் திருவுலாக் காட்சி தந்தருளினார்கள். தருமை ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்களும், அறிஞர்களும் அன்பர்களும், உடன்வரத் திருவுலாக் காட்சி நடைபெற்றது. தருமை ஆதீன இசைப்புலவர் திரு. ஏ. கே. சி. நடராஜன் குழலிசை, புகழ்பெற்ற கலைஞர்களின நாதசுர இன்னிசையுடன் திருமுறை இன்னிசையும் முழங்கத் திருவீதியுலாக் காட்சி நிகழ்ந்தது. தருமை ஆதீனத் திருவீதிகளில் அன்பர்கள் பூரண கும்பங்கள் வைத்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களை வழிபட்டு அருட்பிரசாதம் பெற்றனர். திருவுலாக்காட்சி நிறைவெய்தியதும் கொலுக்காட்சி நடைபெற்றது. அன்பர்கட்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் ஆசியருளி, அருட்பிரசாதம் வழங்கினார்கள்.

திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

தருமை ஆதீனக் குருமுதல்வர் குருபூஜை விழாவையொட்டி 27—5—88 முதல் 6—6—88 வரை திருநெறியத் தெய்வத் தமிழ் மன்றத்தில் நாளதோறும் மாலை 6-30 மணிக்குத் திருநெறிய தமிழ் மாநாடு நடைபெற்றது. திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு, ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 300 ஆவது ஆண்டு நினைவு விழாவாக நடைபெற்றது. தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் 27—5—88 முதல் திருநாளன்று மாலை விழாவைத் தொடக்கி வைத்து ஆசியருளினார்கள்.

திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு, சாத்திரப் பேரவை கருத்தரங்கம், சிந்தனை மேடை, பட்டிமன்றம், வழக்காடுமன்றம், ஒப்பியல் அரங்கம், வினாவிடை அரங்கம், கவியரங்கம் முதலிய நிகழ்ச்சிகளுடன் ஸ்ரீ குமரகுபரர் 300 ஆவது ஆண்டு நினைவு விழா சிறப்பாக நடைபெற்றது.

ஸ்ரீலஸ்ரீ குன்றக்குடி மகாசந்நிதானம், திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் அதிபர் கயிலைமாமுனிவர் ஸ்ரீமத். காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் ஆகியோர் விழாவில் பங்கேற்றனர்

வித்துவான் ஸ்ரீமத். சுவாமிநாதத் தம்பிரான், வித்துவான் ஸ்ரீமத். மௌன மகாலிங்கத்தம்பிரான், திரு வி. ஆறுமுகப்பிள்ளை (இ. ஆ. ப. ஓய்வு), டாக்டர் திரு. மு. சுவாமிநாதன், திரு. சி. ஆர். குஞ்சிதபாதம் ஐயர், செந்தமிழ்ப் புரவலர், திரு. இரா. இராஜசேகரன், திரு. இரா. சிவபுண்ணியம், திரு. இ. எஸ். கணபதி, திரு. எஸ் பாஸ்கரன், வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், திரு. த. விவேகானந்தன, வித்துவான் திருமதி. ப. நீலா ஆகியோர் வரவேற்புரை வழங்கினர்.

தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் திரு. ச. அகத்திய லிங்கம், திருச்சி, பாரதிதாசன் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் திரு. இரா. முத்துக்குமரன், முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார், பல்கலை வித்தகர் திரு. மீ. ப. சோமசுந்தரம், டாக்டர் திரு. கே. அரங்கசாமி பிள்ளை, டாக்டர் திரு. எஸ். என். கந்தசாமி, சர்க்கரை வளர்ச்சிக் கழக இயக்குநர் திரு. ச. மெய்கண்டதேவன், இ. ஆ. ப., மகா வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர், மகாவித்துவான் சி. அருணைவடிவேல் முதலியார், திருமுறைக் கலைஞர் திரு. க. வெள்ளைவாரணனார், டாக்டர் திரு. டி. பி. சித்தலிங்கையா, பேராசிரியர் தி. வ. காந்திமதிநாதன், டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன், டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி முதலிய அறிஞர் கள் முதன்மையுரை, தலைமையுரை, சிறப்புரை ஆற்றினர்.

டாக்டர் திரு. ச. சங்காதரன், திரு. சி. சு. மணி, திரு. அ. பாலகுருவாயன், டாக்டர் திரு. சு. சாமி ஐயா, திரு. ந. மெய்ப்பொருள், திரு. மயில்வாகனன், திரு. சொ. முத்தையன், திருமதி. ப. நீலா, டாக்டர் திரு. பழ. முத்தப்பன், டாக்டர் திரு அ. கலியபெருமாள், டாக்டர் திரு. மு. சிவச்சந்திரன், திரு. சாமி கிருஷ்ணமூர்த்தி, திரு. தெ. இராசாமணி, டாக்டர் சு. திருநாவுக்கரசு, புலவர் திரு. மு. வைத்தியநாதன், திரு. த. அகரமுதல்வன், டாக்டர் திரு. த. அமிர்தலிங்கம், திரு. இரா. மருதநாயகம், திரு இரா. செல்வ நாயகம், கவிஞர் திரு. அரங்கமுத்துமணி, வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன், வித்துவான் திரு. தா. குருசாமி, வித்துவான் திரு. சு. மு. சுந்தரராஜன், திரு. நீ. சு. சுந்தரராமன், திரு. சு. சுவர்ண காளீசுவரன், திருமுறைத்தொண்டர் திரு. என். இராமமூர்த்தி ஐயர், திரு வீ. நாகராஜன், வித்துவான் திரு. சு. முத்துக் கிருட்டிணன், புலவர் திரு. கே. கணபதி, கோவை திரு. எம். பாலசுப்பிரமணியன் முதலிய புலவர்களும் அறிஞர்களும் பல்வேறு நிகழ்ச்சிகள் பங்கேற்றனர்.

தருமை ஆதீனக் கலைக்கல்லூரி மாணவர், திரு. மு. மூவேந்தன் குழுவினரின் மெல்லிசை, முனைவர் திரு. வீ. ப. கா. சுந்தரம் அவர்களின் 'திருஞானசம்பந்தரே தென்னிசையின் தந்தை' என்ற ஆய்வுக் கலைநிகழ்ச்சி, திருப்பணந்தாள், மதுரகான இசைச் செல்வியர் T. V. சுசீலா & இந்திரா சகோதரிகளின் இன்னிசை, தருமை ஆதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி, மாணவ மாணவியரின் கலைநிகழ்ச்சி, திருச்சேறை திருமங்கைதாசன் குழுவினரின் விகடம், மயிலாடுதுறை ஸ்ரீ கணநாதர் பொம்மை நாடகசபையினரின் 'ஆறுபடைவீடு - பொம்மலாட்டம், ஸ்ரீ குருஞான சம்பந்தர் உயர்நிலைப்பள்ளி மாணவ மாணவியரின் கலைநிகழ்ச்சி,

சென்னை திருமதி. கௌரிராஜகோபால் குழுவினரின் இன்னிசை, விரிவுரை - ஹரகதை - செம்பொனார்கோயில் சோமாஸ்கந்த சிவாசாரியர் குழுவினரின் திருமுறை இசையரங்கு, தருமை ஆதீன இசைப்புலவர் டாக்டர் திரு. கோ. சிவசிதம்பரம் குழுவினரின் இன்னிசை முதலிய நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன

ஸ்ரீ திருஞானசம்பந்தர் திருக்கல்யாண விழா

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான ஆச்சாள்புரம் என வழங்கும் திருப்பெருமணநல்லூர் ஸ்ரீ சிவலோகத் தியாகராஜ சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ திருஞானசம்பந்தர் திருக்கல்யாண விழாவும் சிவஜோதி தரிசனமும், தேவார வகுப்பு ஆண்டுவிழாவும் 1-6 88 புதன்கிழமையன்று சிறப்பாக நடைபெற்றன. தருமபுரம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் புலவர் திரு. கே. கணபதி, பி. லிட், பி. எட்., 'ஞானசம்பந்தர் அற்புதங்கள்' பற்றி உரையாற்றினார். அன்பர் பலர் ஜோதி தரிசனத்தில் பங்கு கொண்டு தரிசித்துப் பயன்பெற்றனர்.

ஸ்ரீ திருஞானசம்பந்தர் குருபூஜை விழா

சமயாசாரியருள் ஒருவராகிய ஸ்ரீ திருஞானசம்பந்தர் குருபூஜை விழா விபவ - வைகாசி - 19 ஆம் நாள் (1—6—88) புதன்கிழமை மாலை தருமபுரம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலிலும், சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயிலிலும் சிறப்பாக நடைபெற்றது. குருபூஜை விழாவினை முன்னிட்டு விசேஷ அபிஷேக ஆராதனை நடைபெற்றன. தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் தருமை ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலுக்குக் காலை, மாலை இருவேளைகளிலும் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள்.

தருமபுரம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., 'திருஞானசம்பந்தர் அற்புதங்கள்' பற்றி உரைநிகழ்த்தினார்.

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயில் சமயாசாரியர் சந்தானாசாரியர் சந்நிதியில் திருமுறைக்கலாநிதி திரு ஆர். கனகசபை ஓதுவார் திருமுறைப்பண்ணிசை நிகழ்த்தினார். சிரோமணி, பிரம்மஸ்ரீ. டி. துரைசாமிரத்தின தீட்சிதர் தலைமையில் தருமபுரம், வித்துவான் திரு. சொ. முத்தையன், எம். ஏ., 'திருஞானசம்பந்தர் அருள்வரலாறும், அற்புதப் பதிகங்களும்' பற்றி உரை நிகழ்த்தினார். அன்பர்கள் தரிசித்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயன்பெற்றனர்.

வேளூரில் வசந்தோற்சவம்

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான வைத்தீசுவரன் கோயில் என வழங்கும் புள்ளிருக்கு வேளூர் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானத்தில் 22—5—88 ஞாயிறு அன்று தொடங்கி வசந்தோற்சவம் சிறப்பாக நடைபெற்றது. இரண்டாம் திருநாள் முதல் பத்தாம் திருநாள் முடிய நாள்தோறும் சுவாமி, அம்பாள் புறப்பாடாகி வசந்தமண்டபத்தில் ஊஞ்சல்உற்சவம் நடைபெற்றது. அன்பர்கள் ஊஞ்சல் உற்சவத்தைத் தரிசித்துத் திருவருள் பெற்றனர்.

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்
ஓய்வுபெற்ற ஆசிரியர்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(விபவஹூ ஆனிமீ 1உ முதல் 31உ முடிய)
(15—6—88 முதல் 15—7—88 முடிய)

ஸ்ரீ விபவஹூ வைகாசிமீ 32உ மங்களவாரம் மிருகசீரிஷம் நக்ஷத்திரம் கிமுஸ்துகான கரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 36 நாழிகை 24 விநாடிக்கு, தனுர் லக்கினத்தில் ஸ்ரீ லோக ரட்சகரான சூரிய பகவான் ரிஷப ராசியிலிருந்து மிதுன ராசி சங்கிரமணமாக ஆனிமாதப் பிரவேசம் செய்தருளுகின்றார். அன்று ஷடசீதி புண்ணியகாலம். மறுதினம் ஆனிமாதம் முதல் தேதியாகும். அர்க்காதிபதி செவ்வாய் பகவான் ஆகிறார். ஆனிமீ 7உ ஸ்ரீ சூரிய பகவான் திருவாதிரை நக்ஷத்திரத்தில் பிரவேசிக்கின்றார். அந்த வாராதிபதியாகிய செவ்வாய் பகவான் மேகாதிபதியாகிறார். இவ்வாறு சூரியபகவானால் ஏற்படுத்தப்படுகின்ற அதிபதிகளின் பலனினாலும் சங்கிரமணகால கிரகஸ்திதியின் பலனினாலும் உலக நாடுகளில் எங்கும் யுத்த பயமும் கிரயவஸ்துக்களுக்குக் கெடுதியும் விலைவாசி அதிகமும் ஏற்படும். எங்கும் சிதறலர்கமழையும் புன்செய் பயிர்களுக்குச்செழுமையும் ஏற்படும். ஈஸ்வரகிருபையில் எல்லா ஜீவராசிகளுக்கும் உய்வு ஏற்படும். நாடு பரிபாலிக்கும் உத்தமர்களின் அரிய தொண்டினால் பிரஜை சம்ரக்ஷணாதி நற்கர்மங்கள் பல நடந்து வரும். ஆன்றோர்களால் தேசங்களில் சிவபுண்ணியங்களாகத் தேவாலயத் திருப்பணிகள் தெய்வசம்ரோட்சணங்கள் ஆங்காங்கு நடைபெற்று நாடுகளில் சுபிட்சம் ஏற்படும். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் வந்து சிவசொரூபத்தில் காட்சியளித்துக் கொண்டிருக்கின்ற சிவஞான குருமகான்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள் ஜெகத் குருமகான்கள் உலகில் மாந்தர்கள் உயர்ஞானம் பெரும் பொருட்டு உயர் மையக் கல்விச் சாலைகள் வேத பாடசாலைகள் வெகுவாக ஏற்பட அனுக்கிரகித்து அவை செவ்வனே நடைபெற ஆசியருள்வார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகாலபூசைகள் விசேஷ பூசைகள் சிறப்பாக நடைபெற்று வரும். பக்தர்கள் சிவநேயச் செல்வர்கள் குருபக்தி சிவபக்தியில் சீரிய நெறியில் செல்வம் ஈட்டி நல்வாழ்க்கை நடத்துவர்.

1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை $\frac{1}{4}$

மேஷ ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் நல்ல வகையில் வந்து சேரும். வித்துவத்துவம் கலைத்துறையில் பிரபலஸ்திதியாகும். வாக்குப் பலனில் உன்னத ஸ்திதியும் அரசாங்க கௌரவமும் தரும். நல்ல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுதல் ஆகும். ஜூன் 29 தேதியில் இயந்திர சாதனங்களில் அதிகப்பொருள் முடங்கச் செய்யும். ஜூலை 2 தேதிக்கு மேல் எழுத்து மூலங்களில் அரசாங்க அனுகூலங்களும் நீண்டநாள் வழக்குகளில் சாதகங்களும் ஆகும். தாரம், புத்திரர்களின் நலம் நன்ருக இருந்து வரும். ஜூன் 27, 28 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை $\frac{3}{4}$ - உரோகிணி - மிருகசீரிஷம் $\frac{1}{2}$

ரிஷப ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். பண வருமானம் கணிசமாக வந்து கொண்டிருக்கும். நல்ல பூஷணம் தரும். ஜூலை 2 தேதி ஆனல் வித்துவத்துவம் கலைத்துறையில் புகழும் எழுத்துத்துறையில் அரசாங்கக் கடிதபோக்குவரத்துக்களில் நல்லனவும் ஏற்படும். ஓர் சிவந்த பொருள் பிராப்தியையளிக்கும். எல்லாக்காரியங்களும் பொதுநல நோக்கில் நடந்து கொண்டிருக்கும், தாரபுத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். ஜூன் 29, 30 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் $\frac{1}{2}$ - திருவாதிரை - புனர்பூசம் $\frac{3}{4}$

மிதுன ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். பண வருமானம் சீராகவும், மிதமிஞ்சிய செலவாகவும் இருக்கும். ஸ்திரிவழியினர் கௌரவத்திற்கு டாம்பீகமாக நல்ல ஏற்பாடுகளில் ஈடுபடும், மனேதைரியமாக எல்லாவற்றையும் செய்து வரும். பசு வீடு இவற்றில் தொழில் வேலைவாய்ப்புக்களில் பெரும் பொருள் முடங்கச் செய்யும். ஜூன் 29உ யில் எல்லா வகையிலும் ஜெயபிராப்தியையளிக்கும். தாரம், புத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். ஜூலை 1, 2 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் $\frac{1}{4}$ - பூசம் - ஆயில்யம்.

கடக ராசி 9 பாதங்களும் நற்பலன் தரும். பண வருமானம் மூன்று வகையில் வந்து சேரும். வித்துவத்துவம்,கலைத்துறைகளில் நல்லன ஏற்பட்டுக் கொண்டிருக்கும். நல்ல பூஷணம் தரும். வாகன சுகம் திருப்தியளிக்கும். கண்களில் பூவிழுதல் போன்ற நலிவுதோன்றினும் உடன் குணமாகும் பரோபகார நற்பணிகள் நல்ல விதத்தில் நடந்துகொண்டிருக்கும். தாரம், புத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். ஜூலை 3, 4 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்,

5 சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்ம ராசி 9 பாதங்களும் சுபமானபலனைத் தரும். பண வருமானம் கணிசமாக வரும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் பிரபலஸ்திதியும் அரசமரியாதை பிரமுகர்கள், அறிஞர்கள் போற்றுதலும் ஆகும். தெய்வபுண்ணிய காரியங்களைச் செய்விக்கும். ஞானமார்க்க சிந்தனையாகும். சாஸ்திரோக்தமாகச் செயல்படுதல் ஆகும். நீர் இயந்திரங்களில் அபிவிருத்தி காணும். தாம்பத்திய வாழ்வில் பிணக்கும் சுமுகமும் காணும். ஜுலை 5, 6 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

6 கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியா ராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். பண வருமானம் நிறைய வந்து சேரும். ஜுன் 27 தேதி ஆனல் ஓர் பெரும் பொருள் கைக்கு வரும். வீடு மனை ஒப்பந்தங்களில் நல்லன ஏற்படும். எல்லாவற்றிலும் பெருமதிப்பும் பிரபலஸ்தர்நல்லோர் போற்றுதலும் ஆகும். எல்லாக் காரியங்களும் புத்திசாதுரிய மேம்பாட்டில் நடந்துகொண்டிருக்கும். தாரம், புத்திரர்களின் நலம் நன்ருக இருந்து வரும். ஜுலை 7, 8, 9, தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி -விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். பண வருமாணம் கணிசமாக வந்துகொண்டிருக்கும். பூமியில் இயந்திரங்களில் ஜுன் 29 தேதி முதல் அபிவிருத்தி ஏற்படும். ஓர் பொதுவுடமை நிர்வகிக்கும். மாணுக்கர் பணியாளர்களுக்கு நெறிமுறை வற்புறுத்துதலில் மனக்கசப்பு ஏற்படினும் பின் நலமுணர்ந்து மகிழ்வர். வழக்கு விவகாரங்களில் வெற்றியைத் தரும். தாரம், புத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். ஜுலை 10,11 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபம்

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை

விருச்சிக ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். பண வருமானங்களில் நல்ல ஸ்திதியை ஏற்படுத்தும். இதுவரை பிரிந்திருந்தவர் ஜுன் 29 தேதி அளவில் வந்து கூடுவர். பத்திர லிகிதங்களில் அரசாங்கத் தொடர்பு விஷயங்களில் ஜுலை 2 தேதி ஆனல் விசேஷ நன்மைகளை உண்டுபண்ணும். புத்திரர்களின் கல்வி கலை தொழில்களில் உயர்வும் முன்னேற்றமும் தரும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வ பக்தியில் தானதர்மத்துடன் நடந்துவரும். ஜுன் 15, 16 ஜுலை 12, 13 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர் ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் வரும்; செலவும் ஆகும். மனோதிடம்தரும். ஓர் முக்கிய விஷயத்தில் போட்டி ஏற்படும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் புகழ் உயர்வு அளிக்கும். ஜூன் 29உ அளவில் அன்பிற்குரியவர் அல்லது தொடர்புடையவர் மனஸ்தாபத்தில் விலகிக் கொள்வர். அது 8 மாதகாலம் நீடித்துப் பின் கூடுதல் ஆகும். தாரம், புத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். எல்லாக்காரியங்களும் புத்தி மேம்பாட்டில் அரச கண்யத்துடன் நடந்து வரும். ஜூன் 17, 18, 19 ஜூலை 14, 15, தேதிகள் சந்திராஷ்டமம். புதன் வியாழன்சுபம்

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகர ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பணவருமானம் கண்யத்திற்கு ஏற்பவரவாகிக் கொண்டிருக்கும். குடும்பப் பூசல்கள் மனோவேகம் போன்றவை ஜூன் 29உ அளவில் நீங்கும். வித்துவத்துவம் கலைத்துறையில் அரசுத் தேர்வு போன்றவற்றில் நற்பலனைக் கொடுக்கும். வேலையில் உயர்பதவி தரும். இருப்பிட சௌகரியம் தரும். புத்திரர் அல்லது புத்திரிக்கு சுபமங்களம் ஏற்படும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். ஜூன் 20, 21 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

கும்ப ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வரவு வந்துகொண்டிருக்கும். சிலவிஷயங்களில் மனதில் போட்டி எழும். வித்துவத்துவம் கலைத்துறையில் எழுத்துமூல விஷயங்களில் நல்லன ஏற்படச் செய்யும். வீடு வாகனப்பிராப்தியில் நல்ல சௌகரியம் தரும். காரியங்களில் தாமதபலனாயினும் தக்க சமயத்தில் அன்பர்கள், நண்பர்களால் காரியம் பூர்த்தியாகும். தாரம், புத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். ஞாயிற்றுக் கிழமை சூரியார்ச்சனை செய்ய வயிற்றுப் பொருமல் போன்றவை குணமாகும். ஜூன் 22, 23 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

மீன ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பணவரவு வரும். செலவும் அதிகம் செய்யும். ஜூன் 30உ வரையில் பூமி பிராப்தியில் நஷ்டம்செய்யும். வாழ்க்கைசௌகரியம்வரவேண்டிய பொருளில் பிரயத்தனம்செய்யும். ஆபரணம் வாங்குதலில்முதலீடு செய்யச் சிந்தனைஏற்படும். எல்லாக்காரியங்களும் சந்துஷ்டிஇல்லாவிடினும் மனம் பாரமாய் இருந்து செயல்பட்டுக்கொண்டிருக்கும். ஜூன் 24, 25 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபம்.

பண்டார சாத்திரங்கள் :

சோடசகலாப் பிராசாத சட்கம்

வித்துவான் திருமதி. ப. நீலா

பிறவிப் பெருங்கடல் கடக்கும் தோணியாக இறைவனடி அமையுமென்றால், அதனைப் பற்றும் வகை காட்டுபவர் பற்றற்றாராகிய துறவிகளே. அதனால்தான் பற்றாநெறிக்குப் பற்றுக பற்றற்றார் பற்றினை-என்று திருவள்ளுவர் துறவிகளின் பெருமையை அறிவித்தருளினார் என்பார் கி. ஆ. பெ. விஸ்வநாதம். அதற்கு முற்றிலும் பொருத்தமாகத் தவவேந்தராக விளங்கிய தருமை ஆதீனக் குருமுதல்வர் அருளிய எட்டு நூல்களில் இங்கு ஆயப் படுகின்ற 'சோடசகலாப் பிராசாத சட்கம்' நன்னெறிகாட்டும் விளக்காக - தவநெறிக்கு இட்டுச்செல்லும் தனிச்சுடராக இலங்கு கிறது.

தோத்திரமும் சாத்திரமும் ஆக இறைவன் இருக்கிறான் என்பதனால் அவனை அறியும் நெறிகளும் இரண்டாக, தோத்திர நெறி - சாத்திர நெறி என அமைய வாய்ப்புண்டு. முன்னது இலக்கியம்; பின்னது இலக்கணம். முன்னது அன்புநெறி-பின்னது அருள் நெறி - முன்னது எளிமை; பின்னது அருமை. முன்னது இல்லறத்தாருக்குப் ஏற்றது; பின்னது ஐந்தவித்த ஆற்றலுடை யாருக்கே பெரும்பாலும் ஆகும்.

இலர் பலராகிய காரணமும் இதுபற்றியே எழுந்தது. நோற்பார் சிலராக - பலர் நோலாதவராகப் போனார்கள். இது தவிர யோகம் - பற்றிய அமைந்த ஒரே நூல் இதுவாகும். தவ வேந்தராம் குருஞான சம்பந்தரின் வாழ்வு இந்தத் தொடரில் பல இடங்களில் பயின்று வந்ததால் அந்தப்பகுதி இதில் இடம்பெற வில்லை.

இனி அவரியற்றிய இந்நூலின் அமைப்பை அதன் சிறப்புக ளோடு காணலாம்.

நூலமைப்பு :

இந்த யோகம் பிராசாத யோகம் எனப்படும். வடமொழியில் உள்ள 'பிராசாத ஷட்ஸ் லோகீ' என்ற ஆறு பாடல்கள் கொண்ட நூலை அடிநிலையாகக் கொண்டது.,

ஏழு ஆசிரிய விருத்தங்களால் ஆன இதன் பொருள் சிவஞான கதியைத் தருவது என்பதாகும். ப்ரா - சிவஞானம், ஸா - கதி. த-தருவது.

பிரணவம் ஓம் என்பதை சமஷ்டி என்றும் அதுவே அகரம், உகரம், மகரம் விந்து நாதம் என ஐந்தாக - வியஷ்டியாகவும் அமையும். இக்கூறுகள் பிரணவ கலைகள் எனப்படும்.

பிரமன் தொழிற்படுத்தும் அகாரம் அகங்காரத்தையும், விட்டுணு இயக்கும் உகாரம் புத்தியையும், உருத்திரன் இயக்கும் மகாரம் மனத்தையும், மகேசுவரன் இயக்கும் விந்து சித்தத்தையும், சதாசிவன் இயக்கும் நாதம் புருடனையும் தொழிற்படுத்தி நிற்கும். இப்பிரணவ கலைகள் இன்னும் பன்னிரண்டாகவும் பதினாறாகவும் பகுத்து யோகமுறையில் தியானிக்கப்படும் அமைப்புதான் பிராசாத யோகம்.

பெரியோர் வாக்கில் யோகநெறி :

திருமூலர் நான்காம் தந்திரத்தில் மேதாதி ஈரெட்டுமாகிய மெல்லியல் '(1070) என்று குறிப்பிடுவதை', † சீகாழி தத்துவப் பிரகாசர் தத்துவப் பிரகாசம் என்ற நூலில் பதினைந்து பாடல்களில் கூறியுள்ளார். திருக்களிற்றுப்படியாரில் திருக்கடவூர் உய்ய வந்த தேவர் 'மெய்ம்மைச் சிவயோகமே யோகம்' எனப் பாராட்டினர். இறைவனுடன் ஒன்றும் இவ்யோக நெறியைச் சிவஞான போதம் 'அவனே தானே யாகிய அந்நெறி - ஏகனாகி இறைபணி நிற்க -' என்று சுட்டும்.

கலைகள் பதினாறு கூறுகளும் திரிகலாப் பிராசாதம், பஞ்சகலாப் பிராசாதம், சத்தகலாப் பிராசாதம், அட்டகலாப் பிராசாதம், நவகலாப் பிராசாதம், தசகலாப் பிராசாதம், துவாதச கலாப் பிராசாதம், சோடசகலாப் பிராசாதம் எனப்பெயர் பெறும்.

---

† 'மேதாதி யீரெண்கலை செல்ல மீதொளிஓதா அசிந்தம் ஈதானந்த யோகமே'. 'விந்துவிலும் சுழிநாதம் எழுந்திட'. 'பந்தத் தலைவி பதினாறு கலையதா காக்கலு மாகுங் கலை பதினாறையும்'.

— திருமந்திரம்.

கலைகளின் வன்னமும் தானமும் :

1. நாபித் தானத்திலுள்ள அகாரகலை – அக்கினிக் கொழுந்து போன்றது.
2. இருதயத் தானத்திலுள்ள உகாரக்கலை - சந்திர சூரியருடைய ஒளி போன்றது.
3. கண்டத் தானத்திலுள்ள மகாரக்கலை-மின்னல் ஒளி போன்றது.
4. புருவ மத்தியிலுள்ள விந்துகலை - விளக்கின் ஒளி போன்றது.
5. நெற்றியின் நடுவிலுள்ள அர்த்த சந்திரகலை - வானின் வெளியில் வீசும் பிரபை போன்றது.
6. நெற்றியின் மேலுள்ள திரோதினிகலை- புகைநிறம் போன்றது.
7. உச்சியிலுள்ள நாதகலை - மாணிக்கத்தின் ஒளிபோன்றது.
8. உச்சியின் பின்னுள்ள நாதாந்த கலை - மாணிக்கத்தின் ஒளி போன்றது.
9. துவாதசாந்தத்தின் அடியிலுள்ள சத்திகலையானது - இரண்டு மின்னலிடை ஒளிபோன்றது.
10. சத்தியின் மேலுள்ள வியாபினி கலையானது - நூறுயிர கோடி சூரியர் வட்டத்தின் ஒளிபோன்றது
11. வியோமரூபினி என்னும் கலையானது -ஞானகாயம்போன்றது.
12. அநந்தை கலை – ஞானசமுத்திரம் போன்றது.
13. அநாதை கலை - ஞானக் கண்ணடி போன்றது.
14. அநாசிருதை - நூறுயிரகோடி பூரணசந்திரபிரபைபோன்றது.
15. சமனைகலை - நூறுயிரங்கோடி சூரிய ஒளி போன்றிருக்கும்.
16. உன்மனை – இருள்போன்றிருக்கும்.

இப்பதினாறு கலைகளும் நாபிமுதல் பன்னிரண்டங்குலம் இருந்துவிளங்கும். பிராசாதமாலையும் கலைகளின் வன்னத்தை எடுத்துக் கூறுகிறது. பிராசாத அகவலில் காவை அம்பலவாணத் தம்பிரான் இவைகளை இப்படியே எடுத்தாள்கிருர்.

நற்றழலின் கொழுந்துபய கதிர்மின்னு விளக்கு
  நண்ணும்வா னொளிபுகைமா ணிக்கமிரு மின்னு
உற்றொளிரு மிரவிநூறு யிரகோடி யுதய
  ஒளியன்ன தொகைவட்ட ஞான காயம்
அற்றமில்ஞா னவ்வாழி ஞானக்கண் ணடி
  அவிர்நூறு யிரங்கோடி மதியொளியத் தொகையே
பெற்றின கரவெலில்மேற் பேசவரு மிருளே
  பிறங்குந்தி முதல்முடிமேற் றுவாதசாந்தம் பெறுமே. 1

கலைகளுக்கு அளவும் தானமும் :

அங்குலநா லகரத்திற் குந்தி மீதே
யடுத்திடு மூன்றிற் கெட்டெட் டாயேநிற்குந்
துங்கமுள நாலினுக்கு மூன்று மூன்றுந்
துலங்கியவோ ரிரண்டினுக்கு நான்கு நான்காம்
தங்கியமே லொன்றுக்கு மூன்றே யாகுந்
தயங்கியமே லொன்றுக் கொன்றுகச் சாற்றும்
பங்கமிலா விவைகள்துவா தசாந்தமாகப்
பாங்குபெறு கலைகளெனப் பகருநூலே. 2

மூலாதாரமுதல் ஸ்வாதிஷ்டானம் ஈறுக,‡ பன்னிரண்டங்குலம் போக மேலுள்ள நாபியின் மேலே நாலங்குலம் ஆதார கலைக்குத் தானமாய், உகாரம் மகாரம் விந்து இம்மூன்றும் ஒவ்வொன்றுக் கெட்டங்குலம் தானமாய் இருக்கும்.

அர்த்தசந்திரன், நிரோதினி, நாதம், நாதாந்தம் ஆகிய இந் நான்கு கலைகளுக்கும் ஒவ்வொன்றுக்கும் மூன்றங்குலந்தானமாய் நிற்கும். சக்தி - வியாபினிகலைகளுக்கு ஒவ்வொன்றிற்கும் நாலங்குலந் தானமாயிருக்கும். சமனை கலைக்கு மூன்றங்குலந் தானமாயிருக்கும். உன்மனை கலைக்கு ஓரங்குலந்தானம்.

இந்தப் பன்னிரண்டு கலைகளும் நாபி முதலாகத் துவாத சாந்தமளவாக இங்ஙனஞ் சொன்ன முறையிலே நிற்கும்.

சோடச கலையின் வடிவு :

1. அகார கலை வடிவு - அகரலிபி போன்றிருக்கும்.
2. உகார கலை - உகரலிபி போல.
3. மகாரகலை - மகரலிபி போலிருக்கும்.
4. விந்து - விந்துத்துளி போன்றிருக்கும்.
5. அர்த்தசந்திரகலை - அர்த்தசந்திரன் போன்றிருக்கும்.
6. நிரோதினி கலை - மேலேயொரு முக்கோணமாய் இருக்கும்.
7. நாதம் - இரண்டுவிந்தும் நடுவிலொரு புள்ளியுமாயிருக்கும்.
8. நாதாந்தகலை - வலப்புறம் விந்து, இடப்புறம் கலப்பையுமா யிருக்கும்.

---

‡ பாடல் 10. ஞான. நாகலிங்கத்தம்பிரான்.

9. சத்தி - நடுவில் ஒருவிந்து இரண்டு புறத்திலும் இரண்டு விந்துவாக விருக்கும்.

10. வியாபினிகலையானது, திரிசூலமாய் முடியிலே இரண்டு விந்துமாய் இருக்கும்.

11. வியோமரூபினி. 12. அநந்தை. 13. அநாசிருதை.

14. அநாசிருதை கலைகள், நான்குதிக்கிலும் ஒவ்வொரு விந்துவாய் இருக்கும்.

15. சமனை - இரண்டு குச்சியின் மேல் இரண்டு விந்துவாயிருக்கும்.

16. உன்மனை - ஒருவிந்துவாக விருக்கும்.

அகரமுக ரம்மகரம் விந்து நல்ல
அர்த்தசந் திரனிவையவ் வடிவே யாகும்
புகலவரு முக்கோண மிருவிந்து நடுவே
பொருந்துமலம் விந்துவலம் நடுவே விந்து
தகவுடைய திரிசூல மிரண்டு விந்து
சாரும்வி யோ மாதிநால் விந்து நான்காய்
திகழவரு மிருகுச்சி யிரண்டு விந்து
நீடுமொரு விந்துவென நிறுத்து நூலே. 3

கலைகளின் தேவதை :

1-4. அகார - உகார - மகார - விந்துகலைகளுக்கு முறையே பிர்மா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன் நால்வரும் தேவதைகள்.

4-8. அர்த்த சந்திரகலைக்கும் நிரோதினிகலைக்கும் நாதகலைக்கும் நாதாந்த கலைக்கும் சதாசிவமே அத்தேவதை.

8-10. சத்தி - வியாபினிகலைகளுக்கு ஆகதசிவமே அதிதேவதை.

10-14. வியோமரூபை அநந்தை ஆநாதை அநாசிருதை ஆகிய நான்கிற்கும் பரமசிவமே தேவதை.

14-16. சமனை உன்மனை இரண்டிற்கும் அநாகதசிவமே அதி தேவதை என்று பிராசாத சட்கம் விளக்குகிறது.

பிராசாத மாலையும்,

செங்கமலத் தயன்மேதை யருக்கீச கலைக்குத்
திருமாலாம் விடகலைக்குத் தெய்வமுநந் திரனும்
மங்குல்படி பொன்மகட்கு மணிமாடஞ் செறியு
மன்னுடையா னின்றதிரு மலரடிக் கீழிவையே. (பா. 8.)

என்று கூறிச் செல்கிறது.

மலரயன்முன் னுல்வர்களு மாகுமுந்தி
மருவகர மாதியொரு நாலுக் கும்மேல்
இலகவரு நான்கினுக்குஞ் சதாசிவமே தெய்வம்
எழிலுடைய மேலிரண்டிற் காகதமாஞ் சிவமே
நலமுடைய நான்கினுக்கு நற்பரம சிவமே
நண்ணுமநா கதசிவமே நவிலரிய விரண்டிற்கு
உலகறிய வைந்துமுன் றிரண்டி ரண்டே
யுள்ளாகு மிரண்டி ரண்டிற்கொரு நான்குதானே, 4

என்று குருஞானசம்பந்தர் அருளினர்.

கலைகளின் மலநிலை :

மலங்கள் ஆணவம் கன்மம் மாயை என மூன்ருகவும் மாயையைக் காரணமாயை என வைத்து அதன் காரியங்களை மாயேயம் என்றும், மலங்களின் சக்திகளை அவற்றின் வழியிலேயே நின்று தொழிற் படுத்துகின்ற இறைவனின் சக்தியைத் திரோதானசக்தி என்று - இதையும் ஒருமலமாக வைத்து மலங்கள் ஐந்து எனக் கூறுவர்.

மூலத்தி லோங்கார மசபைக் காக
மொழிவர்கா மிகமலமேல் முகிழ்க்கு முந்தி
யேலத்தான் மேவகர முன்னி ரண்டிற்
கிழுக்குமல மேவிரண்டிற் கிலகு மாயை
சீலத்தான் மேலிரண்டிற் றிகழ்மா யேயந்
திறலுடைய மேலிரண்டிற் சேர்மா மாயை
சாலத்தான் மேலிரண்டிற் றகுதி ரோதந்
தயங்கியமே லிரண்டிற்கா ணவமே சாற்றில். 5

மலங்கள் ஐந்தும் அணுக்களை அணைந்து நிற்கும் - என்று அருணந்திசிவமும், 'மலம் ஐந்தென்பார் ஐந்தும் மாருதருளென்ப தரிதென்பர் அறிந்துளோரே' என உமாபதிசிவமும் குறிப்பார்கள்.

மணிவாசகர் இரண்டமைப்பிலும் கூறுகிருர்.

" மும்மை மலம் அறுவித்து "
"மலங்கள் ஐந்தாற் சுழல்வன் தயிரிற்பொரு மத்தென "

மலமகற்றி மலரடிக்கீழ் வைக்கும் கடனும் இறைவனைச் சேர்ந்ததாகிறது.

கண்ணுதலான் தன் கருணையை உயிர்களிடமாகக் காட்டாத போது - எவர் அவனைக் காணமுடியும்?

மாத்திரையளவு :

அகாரகலைக்கு மூன்றும், உகாரகலைக்கு இரண்டும், மகாரக் கலைக்கு ஒன்றும், விந்துக்கலைக்கு அரையும், அர்த்த சந்திர கலைக்குக் காலும், நிரோதினிக்கு அரைக்காலும், நாதகலைக்கு மாகாணியும், நாதாந்தகலைக்கு அரைமா அரைக்காணி மாத்திரையும், சக்தி கலைக்குக் காணி முந்திரி மாத்திரையும், வியாபினிக்கு அரைக்காணியின் கீழ் அரை மாத்திரையு மெனக் கணக்கிடுவர். இம்முறையில் வியோமருபை முதலான ஆறுகலை களுக்கும் அதிற்பாதி அதிற்பாதி மாத்திரையாம்.

மகார கலைக்கு மேலே மாயேயம்; நாதகலை நாதாந்தகலைக்கும் சுத்த மாயை; சக்திகலைக்கும் வியோபினி கலைக்கும் திரோதமலம் பொருந்திநிற்கும். சமனைக்கும் உன்மனைக்கும் ஆணவமலம் பொருந்தி நிற்கும்.

உயர் தெய்வ கதிகள் :

மூலாதாரத்திலிருந்து விளங்கும் ஓங்காரத்திற்கும் அசபைக்கும் பிரதானமான காமிகமலம் சோதிக்கும் தாவரயோனி பதினாறு லக்ஷமும், நாபியிலே பொருந்தும் அகாரமுதலாக உன்மனை யந்தமாகப் பன்னிரண்டுகலையும் இவ்விரண்டையும் ஒவ்வொன்றாகப் பிரித்தால் ஆறுகூறாகும். முன்வகுத்த ஆறுகூற்றிலே முதற்கூறாகிய அகரமும் உகரமும் ஊர்வனவான யோனிகள் பதினைந்து லக்ஷமும் பிரகிருதி மலத்துடனே சோதனைப்படும். இரண்டாம் கூறாகிய மகரமும் விந்துவும் நீர்வாழ்சாதியான யோனி பத்து நூறாயிரமும் அசுத்த மாயையுடனே சோதனைப்படும். மூன்றாங்கூறாகிய அர்த்த சந்திரன் நிரோதினியும் பறவையான பத்து நூறாயிரம் சுத்த மாயா காரியமான மாயேய வஸ்துவுடனே சோதனைப்படும். நாலாங் கூறாகிய நாதமும் நாதாந்தமும் நாற்காலியான யோனி பத்து நூறாயிரமுஞ் சுத்த மாயையுடன், ஐந்தாம் கூறாகிய வியோமருபினி சத்தி, வியாபினி யென்னுங்கலைகள் மானிடயோனி எண்பது நூறாயிரமும் திரோதான மலத்துடன் சோதனைப்படும். ஆறாங் கூறாகிய சமனை உன்மனை அநாதை அநாசிருதை தெய்வயோனி பதினாறு நூறாயிரமும் ஆணவ மலத்துடன் சோதனைப்படுமென்று ஆகமங்கள் கூறுகின்றன.

அரியமூ லாதார மதனின் மேவி
　　யவிநமோங் காரமெழி லசவைக்காகத்
தெரிவரிய யோனிதா பரமே யாகுந்
　　திகழவரு முந்தியின்மே லகர மாதிப்

பிரிவரிய விவ்விரண்டா யறு கூருகிப்
பெறும்யோனி யூர்வனவு நீரில் வாழ்தற்கு
உரியனவும் பறவைகளு நாற்கான்மா னிடரும்
உயர்தெய்வ கதியுமென வுரைக்கு நூலே. 6

மகாரகலைக்குமேலே ஒருசூனியம் - நிரோதினிகலைக்கு மேலே ஒரு சூனியம், சத்திகலைக்குமேலே ஒரு சூனியம், வியாபினி கலைக்கு மேலே ஒருசூனியமும், சமனகலைக்குமேலே ஒருசூனியமும், உன்மனை கலைக்குமேலே ஒருசூனியமும் உண்டு என்று கூறுகிறார்கள்.

மூன்றகர இரண்டுகர மகரமொன்றே
முந்துவிந்து வரைபிறைகால் முக்கோண மரைக்கால்
ஆன்றமைந்த நாதமா காணிநா தாந்தம்
அரைமாமே லரைக்காணி சத்தியை முந்திரியை
யேன்ற வியாபினி யரைக்காணியின் கீழினரையே
யிம்முறை வியோமாதியரையரை மாத்திரையே
தோன்றுமக ரத்தின்மே னிரோதசத்தியின் மேல்
தோற்றும் வியாபினி சமனைஉன்மனை மேற்சுன்னே. 7

மிகக்கடினமான அரிய வழக்காறுடைய இவ்வியோகம் இப்போது அறிவது சுலபமாகவில்லை. இந்த யோகத்தைத் தருமையாதீன முனிபுங்கவர்கள் செய்துவந்ததாகச் சொல்வார்கள். ஆதீனத்தின் வழிபடு மூர்த்தியான ஸ்ரீ சொக்கநாதர் திருக்கோயிலின் பின்புறமுள்ள மாடங்கள் அவர்கள் இருந்து யோகம் பயின்ற இடமென்பர்.

இந்தப் பிராசாத யோகம் திருமூலர் திருமந்திர வழியில் விளக்கம் பெற்றும் விரிந்தும் பிரிந்தும் வந்த விதம் பிராசாத சட்கத்தாலும பிராசாத மாலையாலும் அறியக் கூடுகிறது.

பனசைச் செந்தமிழ்க் கல்லூரி மாணவர்களின் பரிசுக் கட்டுரைகள் இக்கட்டுரைக்குப் பெரிதும் உதவின. தெளிவுபடாத இடங்கள் வல்லார்வாய்க் கேட்டுணரத் தக்கன என்ற அளவில் இது நிறைவெய்துகிறது.

உ

சிவமயம்

ஆனி மாதச் சிறப்பு நாட்கள்

18—6—88 சனி, சதுர்த்தி விரதம். தருமை ஆதீனம் 19 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிக சுவாமிகள், தருமை ஆதீனம் 23 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் குருபூஜைகள்.

19—6—88 ஞாயிறு, ஆயில்யவிழா. ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் குருபூஜை.

21—6—88 செவ்வாய், இரவு ஸ்ரீ நடராஜர் அபிஷேகம். தருமை ஆதீனம் 3 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிக சுவாமிகள் குருபூஜை. ஸ்ரீ அமர்நீதி நாயனார் குருபூஜை.

22—6—88 புதன், ஆனித்திருமஞ்சனம் தரிசனம். திருவையாறு தீர்த்தம். திருக்கடவூர் ஸ்ரீ காலசம்ஹாரமூர்த்தி அபிஷேகம்.

25—6—88 சனி, திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி சம்வத்ஸராபிஷேகம்.

27—6—88 திங்கள், சோமப்ரதோஷம்.

29—6—88 புதன், பௌர்ணமி விரதபூஜையில் முப்பழம் சாத்துதல். காரைக்கால் மாங்கனிஉற்சவம். ஆனி மூலம் திருவையாறு தீர்த்தம்.

1—7—88 வெள்ளி, 1398 ஆம் பசலி ஆரம்பம்.

2—7—88 சனி, சங்கடஹர சதுர்த்தி. சிரவண விரதம். வைத்தீசுவரன் கோயில் ஸ்ரீ பாலாம்பிகை உடனுகிய ஸ்ரீ வைத்தியநாத சுவாமிக்கும், சிறுகாட்டூர் ஸ்ரீ சித்திவிநாயகருக்கும் சம்வத்ஸராபிஷேகம்.

3—7—88 ஞாயிறு, திருப்பறியலூர் ஸ்ரீ வீரட்டேசுவர சுவாமிக்கும், திருக்குவளை ஸ்ரீ பிரமபுரீசுவர சுவாமிக்கும் சம்வத்ஸர அபிஷேகம்.

6—7—88 புதன், காளாஷ்டமி. ஸ்ரீ ஏயர்கோன்கலிக்காமர் குருபூஜை.

9—7—88 சனி, கிருத்திகை விரதம், ஏகாதசி விரதம்.

10—7—88 ஞாயிறு, வேளூர் கிருத்திகை, தருமை ஸ்ரீ சண்முகர் அபிஷேகம்.

11—7—88 திங்கள், சோமப்ரதோஷம்.

12—7—88 செவ்வாய், கிரு- அஸ்-சசி மாதசிவராத்திரி.

13—7—88 புதன், சர்வ அமாவாசை.

Regd. No. TN / M. M. 1
வெளிநாடு Regd. No. TN / M. M. 4

தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரி

தருமபுரம், மயிலாடுதுறை 609 001.

தருமை ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின்

அருளாதரவில் நடைபெற்று வரும் இக்கல்லூரியில், இக்கல்வியாண்டு முதல் புதியதாக பி. காம் பட்ட வகுப்பு தொடங்கப்பெறுகிறது.

பி. லிட்., பி. காம்., எம். ஏ., எம். ஃபில் வகுப்புக்களில் மாணவர்கள் சேர விண்ணப்பிக்கலாம்.

பி. லிட்., பி. காம் வகுப்புகளுக்கு 20—7—88க்குள் ரூ5/ அஞ்சல் ஆணை செலுத்தியும்,

எம். ஏ., வகுப்புக்கு 5—8—88க்குள் ரூ10/ அஞ்சல் ஆணை செலுத்தியும் விண்ணப்பம் பெறலாம்.

அஞ்சல் வழி விண்ணப்பம் பெற விரும்புவோர் ரூ. 1-00 கூடுதலாகச் செலுத்தவேண்டும்.

தருமபுரம்,
30—6—88.

வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ.,
முதல்வர்.

Printed & Published by V. Ramaiah Pillai Manager, Dharmapuram,
... Dharmapuram, Mayiladuthurai 10-6-88.